விலை ரூபா: 15.00
Registered as a News paper in Srilanka

# வலம்புரி

Valampurii
பக்கங்கள்: பத்து
சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆனி 24 செவ்வாய்க்கிழமை (08.07.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 202




# கொழும்பில் 48 மணி நேரத்தினுள் தாக்குதல் நடத்தப் புலிகள் திட்டம்

## அமைச்சர் யாப்பா நேற்று அறிவிப்பு

(கொழும்பு)

தென்பகுதியில் எதிர்வரும் 48 மணிநேரத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் பாரிய தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டுள்ளமை குறித்த புலனாய்வுத் தகவல்கள் தமக்குக் கிடைத்திருப்பதாகக் கூறி, எதிர்வரும் 10 ஆம் திகதி நடைபெறவிருக்கும் வேலை நிறுத்தப் போராட்டத்தைக் கைவிடுமாறு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேயவர்த்தன நேற்று மதியம் அறிவித்துள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜுலை 10 பணிப்புறக்கணிப்புக்கு தமிழ்க் கூட்டமைப்பு ஆதரவு

(கொழும்பு)

அரசாங்கத்திற்கு எதிராக எதிர்வரும் 10 ஆம் திகதி மேற்கொள்ளப்படவிருக்கும் பாரிய பணிப்புறக்கணிப்புக்கு ஆதரவு தெரிவித்திருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இந்தப் பணிப்புறக்கணிப்பில் தமிழ் மக்களையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளது.

இது குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நேற்று விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜுலை மாதம் 10 ஆம் திகதி அனைத்துத் தொழிற்சங்கங்களும ஒன்றிணைந்து நடத்தவிருக்கும் வேலை நிறுத்தமானது ஏழைத் தொழிலாளர்களின், சாதாரண பொதுமக்களின் விரக்தியை, வெறுப்பை, அவர்களது கஷ்டங்களை, துன்பங்களை வெளிப்படுத்துவதற்கான ஒரு (10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்நாட்டுக் கரையோரங்களில் ஆளில்லாத உளவு விமானங்கள்

(சென்னை)

தமிழ்நாட்டுக் கரையோரப் பகுதிகளில் ஆளில்லாத உளவு விமானங்களைப் பயன்படுத்த இந்திய அரசு தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தமிழ்நாட்டின் தென்கிழக்குக் கரையோரங்களைக் கண்காணிப்பதற்கு ஆளில்லாத உளவு விமானங்களைப் பயன்படுத்துவதற்கு இந்திய அரசு தீர்மானித்துள்ளது. உச்சிப்புள்ளியிலுள்ள கடற்படைத் தளத்திலிருந்து சிறியளவிலான ஆளில்லாத உளவு விமானங்களை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் மோதல்கள் உக்கிர மடைந்து (10 ஆம் பக்கம் பார்க்க)

## மிக்-27 ரக விமானம் மீது புலிகள் தாக்குதல்?

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் நடத்தப்பட்ட விமான எதிர்ப்புத் தாக்குதலையடுத்தே இலங்கையின் மிக்-27 ரக விமானம் கட்டுநாயக்கவை நோக்கி விரைந்ததாகத் தமிழ் நெற் அறிவித்துள்ளது.

தமது விமானம் நேற்று முன்தினம் மாலை 4.20 மணியளவில் வட பகுதியில் தாக்குதலை நடத்தி விட்டுக் கட்டுநாயக்கவில் தரையிறங்கும் போது விபத்து ஏற்பட்டதாகவும் இதில் விமானிக்கு ஆபத்து ஏதும் இல்லை என்றும் விமானப் படையினர் தெரிவித்திருந்தனர்.

எனினும் இந்த விமானம் கிளிநொச்சி வட்டக்கச்சியில் தாக்குதலை நடத்தியபோது தரையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட விமான எதிர்ப்புத் துப்பாக்கித் (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதிக்கு எதிராக தந்திப் போராட்டம்

(கொழும்பு)

இலங்கையில் ஊடகவியலாளர்கள் எதிர்நோக்கும் பாதுகாப்புப் பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு வலியுறுத்தி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஊடகவியலாளர்கள் நேற்றுத் தந்தியனுப்பும் போராட்டம் நடத்தினர்.

தமது வாயில் கறுப்புத் துணிகளைக் கட்டிப் பேச்சுச் சுதந்திரம் கூட மறுக்கப்பட்டுள்ளதை வெளிப்படுத்திய ஊடகவியலாளர்கள் கொழும்புப் பிரதான தபால் நிலையத்தில் நீண்ட வரிசையில் நின்று இந்தத் தந்தியனுப்பும் போராட்டத்தை நடத்தினர்.

கொழும்பில் மட்டுமன்றி வெளிமாவட்டங்களிலும் இந்தத் தந்தியனுப்பும் போராட்டத்தை ஊடகவியலாளர்கள் நடத்தினர். இலங்கையிலுள்ள ஐந்து ஊடக (10 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னியிலிருந்து விடுதலைப்புலிகள் யாழ்ப்பாணத்திற்கு வர முடியாது

## 51-வது படைத் தளபதி ஒவ்சேவருக்குப் பேட்டி

(கொழும்பு)

வன்னியிலிருக்கும் விடுதலைப்புலிகள் யாழ்.குடாநாட்டுக்குத் திரும்புவதைப் பற்றி அவர்களால் நினைத்துக் கூடப் பார்க்க முடியாது என யாழ்.மாவட்டத்தின் 51-வது படைப் பிரிவின் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் எல்.பி.ஆர்.மார்க் தெரிவித்துள்ளளார்.

வன்னிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் மாறி மாறி விடுதலைப்புலிகள் செல்லும் நிலைமை முடிபுக்குக் கொண்டு வரப்பட்டு வன்னியிலிருக்கும் விடுதலைப்புலிகள் யாழ்ப்பாணத்திற்கு வர முடியாத சூழ்நிலை ஏற்படுத்தப்பட்டிருப்பதாக அரசாங்க ஊடகமான சண்டே ஒப்சேவருக்கு வழங்கிய செவ்வியில் அவர் கூறியுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகம், அரசாங்கத் திணைக்களங்கள் உட்பட முன்னணிக் கல்வி நிறுவனங்கள் தமது படைப் பிரிவின் நேரடிக் கண்காணிப்பில் உள்ளன. கடந்த வருடங்களைப் போல் அல்லாது இனிமேல் பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகத்தின் கல்விச் செயற்பாடுகளை எந்தவிதமான ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களின் இடையூறின்றி முன்னெடுக்க முடியும்.

ஏ-9 வீதி மூடப்பட்டதைத் தொடர்ந்து யாழ்.குடாநாட்டுப் பிரதேசத்திற்கு விடுதலைப்புலிகள் ஊடுருவுவது தடைப்பட்டது என தனது செவ்வியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுமக்களின் ஒத்துழைப்புடன் மறைத்து வைக்கப்பட்டிருந்த (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஓமந்தைச் சோதனைச் சாவடி நேற்று மாலை மீண்டும் திறப்பு

(வவுனியா)

ஓமந்தைச் சோதனைச் சாவடி ஒரு வார காலத்திற்குப் பின்னர் நேற்று மாலை மீண்டும் பயணிகள் போக்குவரத்துக்காகத் திறக்கப்பட்டது.

ஓமந்தைச் சூனியப் பிரதேசத்தில் கடந்த முதலாம் திகதி மாலை இடம்பெற்ற விமானக் குண்டுத் தாக்குதலையடுத்து அங்கிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் வெளியேறியதால் ஓமந்தைச் சோதனைச் சாவடி மூடப்பட்டது.

தமது பாதுகாப்புக்கு அரசாங்கம் உத்தரவாதம் அளிக்கும் பட்சத்திலேயே மீண்டும் சோதனைச் சாவடி அமைந்திருக்கும் பகுதிக்குத் திரும்புவோம் எனச் செஞ்சிலுவைச் சங்கத்தினர் தெரிவித் (10 ஆம் பக்கம் பார்க்க)

யாழ்.பாடசாலை கிரிக்கெட் சங்கம் நடத்தும் போட்டியில்

இலங்கைப் பாடசாலைகள் கிரிக்கெட் சுற்றுப் போட்டி - யாழ்.மாவட்டம் 15 வயதின் கீழ்ப் பிரிவு

இன்று

யாழ்.இந்துக் கல்லூரி எதிர் சென்.பற்றிக்ஸ் கல்லூரி
கொக்குவில் இந்துக் கல்லூரி எதிர் சென்.ஜோன்ஸ் கல்லூரி (A)
விக்னேஸ்வராக் கல்லூரி எதிர் ஹாட்லிக் கல்லூரி
மகாஜனாக் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி
ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் யாழ்ப்பாணக் கல்லூரி
யூனியன் கல்லூரி எதிர் யாழ்.மத்திய கல்லூரி

முதலில் குறிப்பிட்ட பாடசாலை மைதானங்களில் போட்டிகள் நடைபெறும்

ஊடக அனுசரணை
வலம்புரி

# ஐந்தாவது ஒருநாள் போட்டியிலும் வென்று தொடரை முழுமையாக கைப்பற்றியது ஆஸி

## சொந்த மண்ணில் மேற்கிந்திய தீவுகளின் சோகம் தொடர்கிறது

(சென்கிற்ஸ்)

ஐந்தாவது ஒருநாள் போட்டியிலும் 169 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மேற்கிந்திய தீவு



கள் அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்தி அவுஸ்திரேலிய அணி தொடரை 5-0 என்ற கணக்கில் முழுமையாக வென்றது.

இதன் மூலம் மேற்கிந்தியத்தீவுகள் மண்ணில் அவுஸ்திரேலிய அணி வெள்ளையடித்தது. மேற்கிந்திய தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்ட அவுஸ்திரேலிய அணி 3 டெஸ்ட், ஒரு "இருபது-20" போட்டி மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடியது.

இதில் டெஸ்ட் தொடரை 2:0 என்ற கணக்கில் அவுஸ்திரேலிய அணி கைப்பற்றியதுடன் "இருபது -20" போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றிபெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற ஒருநாள் தொடரில் முதல் நான்கு போட்டிகளிலும் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி தொடரை 4-0 என்ற கணக்கில் தனதாக்கி முன்னிலை பெற்றது.

இந்நிலையில் 5ஆவதும் இறுதியுமான போட்டி நேற்று முன்தினம் சென் கிற்ஸில் நடைபெற்றது.


இப்போட்டியிலாவது வெற்றிபெற்று சொந்த மண்ணில் ஆறுதலடையலாம் என்ற நிலையில் மேற்கிந்தியதீவுகள் அணி களமிறங்கியதுடன் தொடரை முழுமையாகக் கைப்பற்ற வேண்டும் என்ற நோக்குடன் அவுஸ்திரேலிய அணி களமிறங்கியது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி, விக்கெட் காப்பாளர் ரோன்ஸி, டேவிட் ஹஸியின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களையிழந்து 341 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் அன்ரூ சைமண்ட்ஸ் 66 ஓட்டங்களையும் ரோன்ஸி 28 பந்துகளில் (5 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் உட்பட) 64 ஓட்டங்களையும் டேவிட் ஹஸி 21 பந்துகளில் (4 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் உட்பட) 52 ஓட்டங்களையும் மற்றும் மைக்கல் ஹஸி 51, மார்ஷ் 49 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் எட்வோட்ஸ், சர்வான் ஆகியோர் தலா 3 விக்கெற்றுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு 50 ஓவர்களில் 342 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி, ஜோன்ஸனின் துல்லியமான வேகத்தில் விக்கெற்றுக்களை பறிகொடுத்து 39.5 ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையுமிழந்து 172 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 169 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் பின்ட்லே ஆட்டமிழக்காமல் 59 ஓட்டங்களையும் சந்தர்போல் 38 ஓட்டங்களையும் மார்ஷல் 17 ஓட்டங்களையும் எடுத்தனர்.



பந்துவீச்சில் மிச்சல் ஜோன்ஸன் 5 விக்கெட்டுக்களையும் அணித்தலைவர் மைக்கல் கிளார்க், அன்ரூ சைமண்ட்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இவ் வெற்றியின் மூலம் அவுஸ்திரேலிய அணி ஒருநாள் தொடரை 5-0 என்ற கணக்கில் முழுமையாகக் கைப்பற்றி மேற் கிந்திய தீவுகள் மண்ணில் வெள்ளையடித்தது.

இப் போட்டியின் நாயகனாக ரோன்ஸி தெரிவானதுடன் தொடர் நாயகன் விருதை ஷேன் வோட்ஸன் பெற்றார். (5)

## துளிகள்

### விடாது துரத்தும்

இந்திய அணிக்கு இறுதிப்போட்டி என்றாலே நடுக்கம் வந்துவிடுகிறது. கடைசியாக பங்கேற்ற மூன்று அல்லது அதற்குமேற்பட்ட அணிகள் கலந்துகொண்ட தொடர்களில் 22 முறை இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது. இதில் 18இல் தோல்வி அடைந்துள்ளது. 2 போட்டியில் கோப்பையை பகிர்ந்து கொண்டது. நாட்வெஸ்ட் (2002) அவுஸ்திரேலிய முத்தரப்பு (2008) ஆகிய இரண்டு தொடர்களில் மட்டுமே கோப்பை வென்றுள்ளது.

### இலங்கை சமன்

ஆசிய கோப்பை தொடரில் இந்திய அணியின் ஆதிக்கத்தை நேற்று முன்தினம் இலங்கை சமன் செய்தது. நான்காவது முறையாக கோப்பை வென்ற இலங்கை அதிக கோப்பை வென்ற அணிகள் வரிசையில் இந்தியாவுடன் (4) முதலிடத்தை பகிர்ந்து கொண்டது. பாகிஸ்தான் ஒரு முறை கோப்பை வென்றுள்ளது.

### வில்லன் ஆர்.பி.சிங்

நேற்று முன்தினம் இர்பான் பதான் வீசிய 15ஆவது ஓவரில் ஜெயசூர்யா பந்தை தூக்கி அடித்தார். இதை சுலபமாக பிடித்திருக்கலாம். ஆனால் தவறாக கணித்த ஆர்.பி. சிங். அப்படியே படுத்து நழுவவிட்டார். அப்போது ஜெயசூர்யா 56 ஓட்டங்கள் தான் எடுத்து இருந்தார். பின்னர் ஆர்.பி.சிங். வீசிய 16ஆவது ஓவரில் ஜெயசூர்யா 26 ஓட்டங்கள் அடித்து அசத்தினார். (5)

# ஒருநாள் போட்டி விதிகளில் மாற்றம்

ஒருநாள் சர்வதேச போட்டிகளை மேலும் விறுவிறுப்பாக்க விதிகளில் சில மாற்றங்களைச் செய்துள்ளது. சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) தற்போது உள்ள விதிகளின் படி 3 பவர்ப்ளேயையும் களத்தடுப்பில் ஈடுபட்டிருக்கும் அணித்தலைவர் தேர்ந்தெடுப்பார்.

ஆனால் தற்போது ஒரு பவர் ப்ளேயை துடுப்பாட்ட அணி தேர்வு செய்து கொள்ளலாம் என்று மாற்றப்பட்டுள்ளது.

இரண்டு பவர் ப்ளேக்களில் களத்தடுப்பு செய்யும் அணி கூடுதல் களத்தடுப்பாளரை நிறுத்திக்கொள்ளலாம் என்ற புதிய விதி புகுத்தப்பட்டுள்ளது. தற்போது 30 அடி வட்டத்திற்கு வெளியே ஒரே ஒரு பவர் ப்ளேயின் போது மட்டும்தான் கூடுதல் ஒரு களத்தடுப்பாளர் நிறுத்தலாம் என்ற விதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதேபோல் இருபது-20 கிரிக்கெட்டில் ஆட்டம் ஓட்டங்கள் அளவில் சமன் ஆனால், போல்ட் அவுட் முறைக்குப் பதிலாக கூடுதல் ஒரு ஓவர் முறை அமுல் செய்யப்படவுள்ளது.

களத்தடுப்பு அணி வீரர் காயமடைந்தாலோ அல்லது உடல் நலமின்மை காரணமாகவோ மற்றும் முழுதும் ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணம் ஒன்றிற்காகவோ விளையாட முடியாமல் போனால் மட்டுமே மாற்று வீரர்களம் இறங்க அனுமதிக்கப்படுவர். களத்தடுப்பு செய்யும் அணியைச் சேர்ந்த வீரர்கள் நினைத்த நேரத்தில் மாற்று வீரரை களத்தில் நிறுத்தி ஓய்வறைக்குத் திரும்பும் நடவடிக்கைகளை ஒழிக்க இந்தப் புதிய விதி புகுத்தப்பட்டுள்ளது.

அதேபோல் ஒருநாள் போட்டியில் முதலில் விளையாடும் அணியின் இன்னிங்ஸ் குறித்த நேரத்தில் முடியவில்லை என்றால் இன்னிங்ஸிற்கு இடையிலான இடை வேளை நேரத்தை 30 நிமிடமாக குறைக்காமல் இரு அணிகளின் தலைவர்களும் பரஸ்பர ஒப்புதலின் பேரில் 10 நிமிடம் முதல் 30 நிமிடம் வரை இடைவேளை நேரத்தை தீர்மானித்துக்கொள்ளலாம்.

இந்த ஆட்ட இடைவேளை விதி உடனடியாக நடைமுறைக்கு வருகிறது. மற்ற விதி மாற்றங்கள் சம்பியன்ஸ் கிண்ணம் முதல் நடைமுறைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பவர் ப்ளே குறித்த புதிய விதிகள் ஒக்டோபர் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வருகின்றன. (5)

# வில்லியம்ஸ் சகோதரிகள் சம்பியன்

(லண்டன்)

விம்பிள்டன் டென்னிஸ் தொடரின் பெண்கள் இரட்டையர் பிரிவில் அமெரிக்காவின் செரீனா மற்றும் வீனஸ் வில்லியம்ஸ் சகோ



தரிகள் மூன்றாவது முறையாக சம்பியன் பட்டம் வென்று அசத்தினர்.

கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற விம்பிள்டன் டென்னிஸ் லண்டனில் நடக்கிறது. நேற்று முன்தினம் நடந்த பெண்கள் இரட்டையர் பிரிவு இறுதிப்போட்டியில் அமெரிக்காவின் செரீனா மற்றும் வீனஸ் வில்லியம்ஸ் ஜோடி அமெரிக்காவின் லிசா ரேமண்ட், அவுஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசுர் ஜோடியை சந்தித்தது.. விறுவிறுப்பான ஆட்டத்தில் வில்லியம்ஸ் ஜோடி முதல் செட்டை 6-2 என கைப்பற்றி முன்னிலை வகித்தது.

இரண்டாவது செற்றில் அபாரமாக ஆட்டத்தை தொடர்ந்து இந்த ஜோடி 6-2 என தன் வசப்படுத்தியது.

இறுதியில் வில்லியம்ஸ் ஜோடி ரேமண்ட்-ஸ்டோசுர் ஜோடியை 6-2,6-2எனவீழ்த்தி சம்பியன் பட்டம் வென்றது. இதன் மூலம் இவர்கள் விம்பிள்டன் அரங்கில் மூன்றாவது முறையாக இரட்டையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்றனர்.

### நெஸ்டர்-ஜிமோன்ஜிக் ஜோடி அபாரம்

ஆண்களுக்கான இரட்டையர் பிரிவு இறுதிப்போட்டியில் கனடாவின் டேனியல் நெஸ்டர், செர்பியாவின் நினாட் ஜிமோன்ஜிக் ஜோடி சுவிட்சர்லாந்தின் ஜோனஸ் ஜோர்க்மேன் ஷிம்பாப்வேயின் கெவின் உல்யட் ஜோடியை 7-6, 6-7, 6-3, 6-3 என்ற செட்கணக்கில் வீழ்த்தி விம்பிள்டனில் முதலாவது சம்பியன் பட்டம் வென்றது. (5)

# சங்கக்கார, முரளி, மகரூப்பிற்கு ஆசியாவின் சிறந்த விருதுகள்

(கராச்சி)

ஆசியாவின் சிறந்த துடுப்பாட்ட வீரர் விருதை ஆசிய கிரிக்கெட் சபை இந்திய வீரர் சச்சினுக்கு வழங்கி கௌரவித்துள்ளது.

ஆசிய கிரிக்கெட் சபையின் (ஏ.சி.சி) விருது வழங்கும் விழா பாகிஸ்தானில் நடந் தது. இவ்விழாவில் ஆசிய அளவிலான சிறந்த வீரர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டன. இந்தியாவின் சச்சின் ஆசிரியாவின் சிறந்த ஒருநாள் போட்டி துடுப்பாட்ட வீரர் விருதை தட்டிச் சென்றார் காயம் காரணமாக அவதிப்பட்டு வருவதால் சச்சின் சார்பில் இவ் விருதை இந்திய அணித்தலைவர் தோனி பெற்றுக் கொண்டார்.

சிறந்த டெஸ்ட் துடுப்பாட்ட வீரர் விருது இலங்கையின் விக்கெட் சம்மேளனம் துடுப்பாட்ட வீரர் சங்ககராவுக்கும், சிறந்த டெஸ்ட் பந்துவீச்சாளர் விருது முரளிதரனுக்கும் கிடைத்துள்ளது. மற்றொரு இலங்கை வீரர் மகரூப் சிறந்த ஒருநாள் போட்டி பந்துவீச் சாளர் விருதை கைப்பற்றியுள்ளார். "தலை சிறந்த கிரிக்கெட் வீரர்கள்" எனும் கௌரவ விருது இந்தியாவின் முன்னாள் அணித் தலைவர் கவாஸ்கர் மற்றும் பாகிஸ்தான் முன்னாள் அணித் தலைவர் இமரான்கான் ஆகியோ ருக்கு வழங்கப்பட்டது.

சிறந்த நிர்வாகி விருதை பாகிஸ்தான் கிரிக்கெட்சபை (பி.சி.பி) முன்னாள் தலைவர் கர் னல் நூர்கான் பெற்றார். இவர் ஏ.சி.சி., உருவாவ தற்கு முக்கிய பங்காற்றியவர். ஆசிய கவுன்சிலின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள நசிம் அஷ்ரப் கூறுகையில், கிரிக்கெட் உலகில் ஆசியா மிகப் பெரும் சக்தியாக உருவெடுத்துள்ள நிலையில் வீரர்கள் கௌரவிக்கப்பட வேண்டும் என்றார். (5)

## இன்று ஒரு தகவல்

# மருமகள்

இப்பொழுது எல்லாம் மாமியார்-மருமகள் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு நல்லவிதமாகத்தான் இருக்கிறார்கள். அதனால் நான் சொல்லப்போகும் கதையைக் கேட்டு யாரும் சண்டைக்கு வந்துவிடாதீர்கள். சரி... இப்ப கதைக்கு வருவோம்.

அந்த வீட்டில் மாமியார் ஆட்சி. அவர் வைத்தது தான் சட்டம். அவருடைய மகன் அம்மா சொல்வதையும் கேட்பான். மனைவி சொல்வதையும் கேட்பான். நமக்கு எதற்கு வம்பு என்று நினைப்பவன்.

மருமகள் மீது குறை கண்டு பிடிப்பதிலேயே அந்த மாமியாருக்கு ஒரு சுவாரஸ்யம்! சின்ன சின்ன விஷயத்திற்கெல்லாம் குற்றம் கண்டு பிடிப்பார்.

பொதுவாக எல்லோரும் ஏதாவது ஒரு காரணத்துக்காக சண்டை போடுவார்கள். ஆனால் அந்த அம்மா சண்டை போடுவதற்காக காரணத்தைத் தேடிக் கொண்டிருப்பார். அப்படி ஒரு மனசு அவருக்கு!

அந்த மருமகள் பாவம். பயந்து பயந்து ஒவ்வொரு காரியமும் செய்து கொண்டு இருப்பாள்.

இப்படியே பல வருஷம் ஓடிப்போனது! அந்த மாமியாருக்கும் வயதாகி விட்டது. இருந்தாலும் அந்தப் பழைய சுபாவம் மட்டும் மாறவில்லை! திடீரென ஒரு நாள் பக்கவாதம் வந்து ஒரு பக்க கை, கால் இழுத்து சுத்தமாக பேச முடியாமல் போய்விட்டது. சத்தம் மட்டும் வரும். கதைக்க மாட்டார்.

ஒரு பக்கத்து கை, கால் மட்டும் தான் அசைக்கமுடியும்... பேசுவது கூட சைகையால் தான். இப்படிப்பட்ட நிலைமையில் கூட... மருமகள் தண்ணியோ, பாலோ கொண்டு வந்து வைத்தால் அதை வேணுமென்றே தட்டி விட்டு வம்பு வளர்ப்பார்.

மருமகள் தரையை சுத்தப்படுத்தும் போது அதைப் பார்த்து ரசிப்பார். இருந்தாலும் இதையெல்லாம் பெரிது படுத்தாமல் மிகவும் பொறுமையோடு இருப்பாள் மருமகள்.

ஒரு நாள் வீட்டில் வைத்திருந்த பாலை பூனை குடித்து விட்டது. வயதானகாலத்தில் இந்த அம்மா பால் இல்லாமல் கஷ்டப்படுவாரே என்று நினைத்து பக்கத்து வீட்டில் போய் பால் வாங்கிக் கொண்டு வந்து காய்ச்சி மாமியார் முன் கொண்டு போய் வைத்தாள் மருமகள்.

வழக்கம் போல அந்த அம்மா பாலைத் தட்டி விட அதை மருமகள் கவனித்து விட்டாள். இவ்வளவு நாள் பொறுமையாக இருந்த அந்த மருமகளுக்கு இன்றைக்கு இதைப்பார்த்ததும் அசாத்திய கோபம் வந்துவிட்டது. கதவுக்குப் பக்கத்தில் சாத்தி வைத்திருந்த உலக்கையை எடுத்து மாமியார் தலையில் போட்டாள். அது குறிதவறி கழுத்தில் பட்டதும் அந்த அம்மா கழுத்தைப்பிடித்துக் கொண்டு ஆ... ஊ என்று கத்த ஆரம்பித்தார்.

மருமகள் கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளாமல் உலக்கையை எடுத்து மறுபடியும் கதவு பக்கமாக சாத்தி விட்டு,சென்று விட்டாள்.

இருந்தாலும் மனதுக்குள் லேசான பயம் இருந்தது. கணவன் வீட்டுக்கு வந்து என்ன விஷயம் என்று கேட்டால் எப்படி சமாளிப்பது? என்று யோசித்தாள். அன்றைக்குப் பார்த்து ரொம்பநேரம் கழித்து வீடு வந்து சேர்ந்தான் கணவுன்.

உடனே அந்த அம்மா புகார் செய்ய ஆரம்பித்தாள் பேச்சுத்தான் வராதே! அதனால் ஒருபக்கக் கையால் கதவு பக்கமாக இருந்த உலக்கையை காட்டி .... அப்படியே அந்தக் கையை தன் கழுத்துக்குப் பின்பக்கமாக சுத்திக் காட்டி... நாக்கை வெளியே நீட்டி... நடந்த விஷயத்தை புரியவைக்க முயற்சி செய்தார்!

இவனுக்கோ ஒன்றும் விளங்கவில்லை! "என்ன சொல்றாங்க அம்மா?" என்று மனைவியிடம் கேட்டான். அதற்கு அவள் ரொம்ப புத்திசாலித்தனமாக...

என்னங்க ... உங்கள் அம்மா சொல்வது உங் களுக்கு இன்னும் விளங்கவில்லையா? அவங்க உங்களைப் பார்த்து "ஏன்டா உலக்கை மாதிரி நிற்கிறாய்? சாகப்போற எனக்கு சங்கலி எதற்கு? என் கழுத்தில் கிடக்கிற இந்த சங்கிலியை கழற்றி என் மருமகள் கழுத்தில் போட்டு விடு!" என்று சொல்கிறார் என்றாள்.

"ஓ... அப்படியா விஷயம்" என்று சொல்லி அம்மாவின் கழுத்திலிருந்த சங்கிலியை எடுத்து மனைவி கழுத்தில் போட்டுவிட்டு...

"அம்மா... உன் விருப்பப்படியே போட்டாச்சு.... இனி மேலாவது நிம்மதியாக படுத்துத்தூங்கு! என்று சொல்லி விட்டு உள்ளே போய்விட்டான், பார்த்தீர்களா கதையை! அதனால், மாமியார்களே! சைகை காட்டுவ தென்றால் கூட இனிமேல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# மடு தேவாலயத்துக்கு செல்வதற்கு இன்னும் அனுமதி இல்லை-மன்னார் ஆயர்

மன்னார் மடுமாதா ஆலய வளாகத்துள் குருமார்கள் செல்வதற்கு பாதுகாப்புப் படையினர் அனுமதி வழங்கவில்லை என மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் அடிகளார் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இருப்பினும் இக் குற்றச்சாட்டை மறுத்துள்ள இராணுவத்தினர் குருமார்கள் எந்தநேரத்திலும் அங்கு சென்றுவர முடியும் எனத் தெரிவித்துள்ளனர். மடுத்திருத்தலத்திலுள் குருமார்கள் செல்வதற்கான அனுமதியை பாதுகாப்புத் தரப்பினர் வழங்கினால் மாத்திரமே மடுமாதா திருச்சொரூபத்தை மீண்டும் அங்கு கொண்டுவர முடியும் எனத் தெரிவித்துள்ள இராயப்பு ஜோசப் அடிகளார் மடுமாதா ஆலய வளாகத்தின் பாதுகாப்பு சகல வழிகளிலும் உறுதிப்படுத்தப்பட்டபின்னரே அங்கு வழிபாடுகளை நடாத்த முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

மடுமாதா ஆலயத்தின் பிரதான வருடாந்த உற்சவம் எதிர்வரும் ஒகஸ்ட் 15ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் மடுமாதா திருச்சொரூபம் அதற்கு முன்னர் அங்கு கொண்டுவரப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் மடுமாதா வளாகத்தின் புனிதத் தன்மையைப் பேணுமாறு விடுதலைப்புலிகளிடமும் அரசாங்கத்திடமும் வேண்டுகோள் விடுத்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ள மன்னார் மறை மாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் அடிகளார் இருசாராரும் இந்த வேண்டுகோளை மதித்து நடப் பார்கள் என தாம் எதிர்பார்ப்பதாகவும் நம்பிக்கை வெளியிட்டார்.

இது குறித்து கருத்து வெளியிட்டிருக்கும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார மன்னார் மறைமாவட்ட ஆயர் எந்தவொரு நேரத்திலும் மடுமாதா ஆலயத்திற்கு சென்றுவர முடியும் எனவும், ஏற்கனவே மன்னார் மாவட்ட குருமுதல்வர் விக்டர் சோசை அடிகளார் தலைமையிலான ஒரு குழுவினர் அண்மையில் அங்கு சென்று வந்துள்ளதாகவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

### பாதுகாப்புக் காரணங்களால் பொதுமக்களை அனுமதிக்க முடியாதுள்ளது

இருப்பினும் மடுப் பிரதேசத்தில் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதாலும், பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு சாதாரண மக்களை அங்கு செல்ல அனுமதிக்க முடியாதிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அந்தப் பிரதேசத்தின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்ட பின்னர் சில வேளை அங்கு செல்ல அனுமதிக்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், வருடாந்த ஆடித் திருவிழா இம்முறை மடுமாதா ஆலயத்தில் நடைபெறவில்லை எனவும் இதன்பொருட்டு மன்னார் மாவட்டத்திலுள்ள சகல தேவாலயங்களிலும் மடுத்திருப் பலி ஒப்புக்கொடுக்கப்பட்டதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஏப்ரல் மாதம் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான மோதல்கள் மடுப்பகுதியில் தீவிர மடைந்ததையடுத்து மடுமாதா திருச்சொரூபம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள தேவன்பிட்டி தேவாலயத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டது. மடுப் பகுதி இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்ட பின்னர் அங்கு புதைக்கப்பட்டிருக்கும் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு 6 வாரங்களில் மடு தேவாலய நிர்வாகத்திடம் கையளிக்கப்படுமென இராணுவத்தினர் உறுதி மொழி வழங்கியிருந்ததமை இங்கு குறிப்பிடத்தக்கது. (அ)

## இராசிபலன்

08.07.2008
(ஆனி 24, செவ்வாய்க்கிழமை)
பூரம் முற்பகல் 10.27 மணிவரை
ஷஷ்டி பின்னிரவு 1.24 மணிவரை
இராகுகாலம் 02.58-04.25 மணிவரை
சுபநேரம்-10.28-11.58 மணிவரை
குமார ஷஷ்டி விரதம்,
இரவு நடேசர் அபிஷேகம்

| | |
|---|---|
| மேடம் | தேக ஆரோக்கியம், எடுத்த காரியம் கைகூடும், மனமகிழ்ச்சி. |
| இடபம் | முயற்சி தாமதம், குடும்பக் கவலை, வேலைச்சுமை. |
| மிதுனம் | உடல் சோர்வு, தொழில் ஆர்வம், வாகனசுகம், உறவினர் சந்திப்பு. |
| கடகம் | பிராயாண நன்மை, நினைத்த காரியம் கைகூடும், தனலாபம். |
| சிங்கம் | கற்பனை மிகுதி, விவாதம், காரிய தாமம், அதிகசெலவு. |
| கன்னி | நண்பர்கள் சந்திப்பு, விருந்து பசாறம், நல்ல முயற்சி. |
| துலாம் | உறவினர் மனஸ்தாபம், எதிர்பாராத நன்மை, சுபசெலவு. |
| விருச்சிகம் | எடுத்தகாரியம், கைகூடும், உறவினர் உதவி, போசனசுகம். |
| தனுசு | புதியவிடயம், தொழில் மேன்மை, நண்பர்கள் உதவி, காரியஅனுகூலம். |
| மகரம் | அதிக பிரயாசை, எதிர்பாராத செலவு, பிரயாணம், முயற்சிதாமதம். |
| கும்பம் | புனல்வியாதி, வீண்பிரச்சினை, வாகனபயம், வேலைச்சுமை. |
| மீனம் | திடீர் பயணம், செல்வாக்கு, பொருள் சேர்க்கை, நண்பர்கள் உதவி. |

வளவன்

## விண்ணப்பம் கோரல்

### வினைத்திறன்காண் தடைப்பரீட்சை

அரசாங்க முகாமை உதவியாளர்கள் சேவையில் வகுப்பு II ஐச் சேர்ந்த அலுவலகர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள்தத்தம்திணைக்களத்தலைவர்கள் ஊடாக 2008-08-04 ஆம் திகதி யன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக கூஷபரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, பெலவத்தை, பத்தரமுல்லை என்ற விலாசத்திற்கு அனுப்பிவைக்க வேண்டும். (ஓ)

### கிராம அலுவலர் தரம் I க்கு பதவி உயர்வுக்கான பரீட்சை

கிராம அலுவலர் சேவை தரம் II இல் 31-07-2008ஆம் திகதி 10 வருட சேவையை பூர்த்தி செய்தவர்கள் தரம் I க்கு பதவியுயர்த்துவதற்குரிய போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் தத்தம் பிரதேச செயலாளரின் பரிந்துரைகளுடன் பரீட்சை ஆணையாளர் நாயகம் இலங்கை பரீட்சைத் திணைக்களம், பத்தரமுல்லை எனும் முகவரிக்கு இம்மாதம் 31ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படவேண்டும்.

### திறமையின் அடிப்படையில் கிராம அலுவலர் தரம் I க்கு பதவியுயர்வு

கிராம அலுவலர் சேவையில் 31.07.2008 ஆம் திகதியன்று கிராம அலுவலர் சேவை தரம் II இல் 15 வருட சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்த அலுவலர்களை தரம் I க்கு பதவியுயர்த்துவது சம்பந்தமான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் 31.07.2008 அன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக தத்தம் பிரதேச செயலாளர் ஊடாக மாவட்டச் செயலருக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும்.

மேலதிக தகவல்களை யூலை மாதம் 04 ஆம் திகதிய வர்த்தக மாணியிலோ அன்றி வலம்புரிக்காரியாலயத்திலோ பார்வையிடலாம். (ஓ)

## இன்று திருநெல்வேலி முத்து மாரியம்மன் இரதோற்சவம்

### திருநெல்வேலிப் பதியமர்ந்தவளே தேரேறி வருக!

திருநெல்வேலி பதியமர்ந்த மாரியே தேரேறிவருக!
தீர்வொன்றை தந்தருள தாயே தே ரேறி வருக
அருள்வடிவுடன் அடியவரைக் காப்பவளே தேரேறிவருக
அற்புதமாய் சிவன் மருங்கில் அமர்ந்தவளே தேரேறி வருக

மதுரகவி

## இன்று மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய கொடியேற்றம்



### மானிலம் வேண்டும் தீர்வருள மாவைக் கந்தனே கொடியேற்று!

மாருதப்புரவீக வல்லி வாழ்வுபெற வழிபட்ட
மாவைக் கந்தனே உன் கொடி யேற்று
பார்படும் துயர்தீக்க அபிஷேகக்கந்தனே
பாங்கான தீர்வருள கொடியேற்று
ஊர் சூழ்ந்தே உன்னை வழிபட்டு உய்திபெற
உவப்பான காலமதை உருவாக்க கொடியேற்று
பூர்வீக வரலாற்று சிறப்புடன் மாவைப்பதியமர்ந்தவனே
புவனமது வேண்டும் தீர்வருள கொடியேற்று

மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன்.

## இலவச ஆயுர்வேத வைத்திய சேவையும் ஆலோசனையும்

(சங்கானை)

உள்ளூராட்சி வாரத்தினை முன்னிட்டு வலிகாமம் வடக்குப் பிரதேச சபையினால் இலவச ஆயுர்வேத வைத்திய சேவையும், ஆலோசனையும் இளவாலை வடக்கு மற்றும் மயிலிட்டி உப அலுவலகத்துக்குட்பட்ட மக்களுக்கு வழங்கப்படவுள்ளது.

மயிலிட்டி உப அலுவலகத்துக்கு உட்பட்ட மக்களுக்கு நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு குட்டியப்புலம், பொது நூலகத்திலும், இளவாலை வடக்கு மக்களுக்கு எதிர்வரும் 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு இளவாலை வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திலும் இவ் வைத்திய சேவை வழங்கப்படவுள்ளது.

பொதுமக்கள் இவ் ஆயுர்வேத வைத்திய சேவையையும், ஆலோசனையையும் பெற்றுப் பயனடையுமாறு வலிகாமம் வடக்கு பிரதேச சபை செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-15)

## வளர்ப்பு நாய்களுக்கான விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட நல்லூர் அரியாலை பிரதேச வளர்ப்பு நாய்களுக்கான(A.R.V) விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி நாளை புதன்கிழமை காலை 9மணி முதல் 12 மணிவரை நாயன்மார்க்கட்டு சனசமூக நிலயத்திலும் பிற்பகல் 2 மணி முதல் 3.30 மணிவரை அரியாலை திருமகள் சனசமூக நிலையத்திலும் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் 12 மணிவரை அரியாலை கலைமகள் சனசமூக நிலையத்திலம் பிற்பகல் 2மணி முதல் 3.30 மணிவரை றக்கா வீதி சனசமூக நிலையத்திலும் வைத்து வழங்கப்படவுள்ளது.

இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்குப் மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார்.(அ)

## இந்துக் கலைக்கூடம் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட இந்துநாகரிகத் துறையின் அருங்காட்சியகமான இந்துக் கலைக்கூடத் திறப்பு விழா நாளை புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு கி.ஜெயதீஸின் எடுத்தாளுகையில் நடைபெறவுள்ளது.

கலைக்கூடத்தை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் நா.சண்முகலிங்கன் திறந்து வைக்கவுள்ளார். (ஓ)

## இரதோற்சவம்

(சித்தங்கேணி)

சித்தங்கேணி தனுவோடைப்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ சிவ சிதம்பரேஸ்வரர் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவத்தின் 9 ஆம்நாள் திருவிழாவான இன்று காலை 7.30 மணிக்கு வசந்த மண்டபப் பூசையும் காலை 8.30 மணிக்கு பஞ்சரத பவனியும் மகாராஜ உபசாரத்துடன் பஞ்சமூர்த்திகள் வீதிவலம் வரும் நிகழ்வும் இடம் பெறும். (அ)

# க.பொ.த (உ.த) மாணவர்களுக்கு துரித மீட்டல் செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்விச் செயலரின் ஆலோசனையின் பேரிலும் வடமாகாண கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடனும் யாழ். வலயக் கல்வி அலுவலகத்தினால் யாழ்ப்பாணம்,தென்மராட்சி,தீவக வலயத் திலிருந்து 2008 ஆகஸ்டில் க.பொ.த. (உ.த) பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு துரித மீட்டல் செயலமர்வு நடாத்தப்படவுள்ளது.

யாழ்.வலய அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட ஆசிரியர்களினால் தயாரிக்கப்பட்ட பரீட்சைக்குதவும் குறிப்புகளும் மாதிரி வினாக்களும் அடங்கிய கையேடுகளும் வழங்கப்படவிருப்பதுடன் இவை தொடர்பான விளக்கங்களும் அளிக்கப்படவுள்ளன.

இணைந்த கணிதம் வேம்படி மகளிர் கல்லூரியிலும் ஏனைய பாடங்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலும் நடைபெறும். பங்குகொள்ளும் மாணவர்களுக்கான தேநீர் சிற்றுண்டிகள் வழங்கப்படும்.

துரிதமீட்டல் செயற்றிட்டத்தில் மேற்குறிப்பிடப்பட்ட வலயங்களைச் சேர்ந்த மாணவர்களும் பங்குபற்றி பயன்பெறுமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (ஓ)

| பாடம் | 14.07.2008 (திங்கள்) | 15.07.2008 (செவ்வாய்) | 16.07.2008 (புதன்) |
|---|---|---|---|
| இணைந்த கணிதம் | 8.30-10.30 | 1.30-3.30 | 11.00-1.00 |
| உயிரியல் | 8.30-10.30 | 1.30-3.30 | 11.00-1.00 |
| பௌதிகவியல் | 11.00-1.00 | 8.30-10.30 | 1.30-3.30 |
| இரசாயனவியல் | 1.30-3.30 | 11.00-1.00 | 8.30-10.30 |

# யாழ்.முகாமையாளர் அமைப்பு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் முகாமையாளர் அமைப்பின் 12ஆவது கருத்தரங்குத் தொடர், "நுண் நிதியியல் மற்றும் கிராமியப் பொருளாதாரம்" எனும் கருப்பொருளில் நல்லூர், இல.17, விவசாய சேவைகள் ஒழுங்கை நல்லூரில் அமைந்துள்ள ஈரோவில் மாநாட்டு மண்டபத்தில் இம் மாதம் 12 ஆம்திகதி சனிக்கிழமை காலை 9 மணி முதல் பிற்பகல் 1 மணிவரை யாழ். செயலக மீள் எழுச்சித் திட்டப் பிரதி திட்டப் பணிப்பாளர் வி.விஸ்வலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் வரவேற்புரையை ஓய்வுபெற்ற வடமாகாண உதவிப் பொதுமுகாமையாளர் கே.பாலசுப்பிரமணியம் நிகழ்த்தவுள்ளார்.

கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்கள உதவிப் பணிப்பாளர் கலாநிதி திருமதி வத்சலா அமிர்தலிங்கம் "கிராமியப் பொருளாதாரத்தில் கால்நடை வளர்ப்பின் செல்வாக்கு" எனும் பொருள் பற்றியும், யாழ். தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் வி. அருளானந்தன் "நுண் நிதியியல் நிறுவனங்களின் செயற்பாடு" எனும் பொருளிலும், சுன்னாகம் இலங்கை வங்கி முகாமையாளர் எஸ்.பி. அரசகுமார் "நுண் நிதியியலின் அடிப்படை" எனும் பொருளிலும் கருத்துரை வழங்கவுள்ளனர்.

அடுத்து, யாழ். மக்கள் வங்கி உதவிப் பிராந்திய முகாமையாளர் எஸ்.ஹென்றி, சுன்னாகம் வர்த்தக வங்கி முகாமையாளர் ஏ.ஆர். குலேந்திரன், யாழ்.செலான் வங்கி முகாமையாளர் எஸ்.அரவிந்தன், சுன்னாகம் ஹற்றன் நஷனல் வங்கி உதவி முகாமையாளர் எம்.தயாகரன் ஆகியோரின் குழுக் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

பொறியியலாளர் எம்.தில்லைநாதனின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுறும். (ஓ)




# விசேட ஆங்கிலக் கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையினரால் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள விசேட ஆங்கிலக் கற்கைநெறியானது வலிகாமம் பிரிவில் உள்ள இணுவில் பொது நூலகத்தில் (பரராஜசேகரப் பிள்ளையார் கோவில் முன்பாக) அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளது.

இதில் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழகத்திற்கு தெரிவுசெய்யப்பட்டோர், பாடசாலையிலிருந்து விலகியோர், இளையோர், வேலை தேடுவோர் மற்றும் தொழில் செய்வோர் யாவரும் இணைந்து பயன் பெறலாம்.

இக் கற்கைநெறி ஆறுமாத காலம் கொண்டதுடன் யாழ்ப்பாணத்தின் பிரபல ஆங்கில ஆசிரியரான ரி.என்.பஞ்சாட்சரத்தினால் போதிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதி வகுப்புகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இணுவில் பொது நூலகத்தில் அல்லது இ.செ.ச.யாழ். கிளையில் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படுகின்றது.

விண்ணப்ப முடிவுத் திகதி எதிர்வரும் 12 ஆம் திகதியாகும்.

மேலதிக தகவல்களுக்கு கீழ்வரும் தொலைபேசி மூலமாகவும் தொடர்பு கொள்ள முடியும். (021 2222561, 021 2225942)

மாணவர்களை வகைப்படுத்துவதற்காக முன் மதிப்பீட்டுப் பரீட்சை எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு இணுவில் பொது நூலக மண்டபத்தில் நடைபெறும் என்பதையும் இ.செ.ச. யாழ். கிளை நிர்வாகிகள் அறிவித்துள்ளனர். (அ)

## சத்துணவு விநியோகம்

(புத்தூர்)

வலி. கிழக்கு பிரதேச சபையிற்குட்பட்ட போரூட் சத்துணவு திட்டத்தில் இணைந்து கொண்ட அனைத்து முன்பள்ளி மாணவர்களுக்குரிய சத்துணவு நாளை புதன்கிழமை காலை 9.30 தொடக்கம் மாலை 1.30 மணிவரை விநியோகிக்கப்படவுள்ளது.

எனவே அனைத்து முன்பள்ளி ஆசிரியர்களும் தத்தமது பிரதேச சபை உப அலுவலகங்களில் தவறாது உரிய நேரத்தில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு வலி கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் கேட்டுக்கொள்ளுகின்றார். (ஓ)

## முன்பள்ளி சிறார்களுக்கான சத்துணவு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்டதும் யாழ்.மாநகரச சபை எல்லைக்குட்பட்டதுமான முன்பள்ளிச் சிறார்களுக்கு சத்துணவு வழங்குவதற்கான உணவுப் பொருட்கள் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் 12 மணி வரை இரண்டு ஆசிரியர்கள் உள்ள முன்பள்ளிகளுக்கும் நண்பகல் 12 மணி தொடக்கம் 5 மணிவரை ஒரு ஆசிரியர் உள்ள முன்பள்ளிகளுக்கும் யாழ். மாநகர சபையில் வைத்து வழங்கப்படவுள்ளன.

முன்பள்ளிப் பொறுப்பாசிரியர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட பதிவேட்டுப் புத்தகத்துடனும் மற்றும் உரிய ஆயத்தத்துடனும் வருகை தந்து அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு மாநகர ஆணையாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (அ-6)

## பாலர் பகல் விடுதி விளையாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் வடக்கு பாலர் பகல் விடுதியில் கோப்பாய் சமூக சேவா சங்கத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட விளையாட்டு விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை பகல் 2மணியளவில் கோப்பாய் சமூக சேவா சங்கத்தின் உப தலைவர் க.விஜயதேவன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் வலி.கிழக்கு பிரதேச சபை செயலர் பி.ரி.நடராஜா, கோப்பாய் பிரதேச சிறுவர் நன்னடத்தை அதிகாரி திருமதி ஜே.மஞ்சுளா, கோப்பாய் வடக்கு கிராம உத்தியோகத்தர் எஸ்.சண்முகவடிவேல்,

கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலய அதிபரும் பாலர் பகல் விடுதி போசகருமான எம். ஞானசம்பந்தன், கோப்பாய் கிராமிய வங்கி முகாமையாளர் ஆர்.தர்மலிங்கம், ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி ஏ.சண்முகலிங்கம் ஆகியோருடன்

கோப்பாய் வடக்கு பாலர் பகல் விடுதியின் தலைவர் க.இ.குமா ரசாமி, செயலாளர் ஐ.சிவலோகநாதன், பொருளாளர் செ.தெய்வேந்திரம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

அத்துடன் குழந்தைகளின் அணி வகுப்பை ஏற்றுக்கொண்ட விருந்தினர் நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தனர்.

நிகழ்வுகள் நடந்தேறியதுடன் வெற்றியீட்டிய பாலர்களுக்கு விருந்தினர்கள் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தனர். (ஓ)



கரவெட்டிப் பிரதேச கலை இலக்கிய விழா நெல்லியடி தடங்கன்புளியடி முருகமூர்த்தி ஆலய கலாமண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது. இவ் விழாவையொட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையில் நடாத்தப்பட்ட போட்டியில் வெற்றி பெற்ற மாணவி ஒருவருக்கான பரிசிலை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அதிபர் எஸ்.சேதுராஜா வழங்குவதை முதலாவது படத்திலும், யாழ்.மாவட்ட மீள் எழுச்சித் திட்டப் பணிப்பாளர் வி.விஸ்வலிங்கம் கலைஞர் கே.விஜயரட்ணத்திற்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும், அருகில் கலாசார உத்தியோகத்தர் எஸ்.செல்வசுகுணா நிற்பதை இரண்டாவது படத்திலும்,கௌரவிக்கப்பட்ட கலைஞர்களான எஸ்.நடராஜா சார்பில் கௌரவிப்பினை ஏற்ற திருமதி எஸ்.நந்தினி, திருமதி எஸ்.சதாசிவம், ஆர்.சிவபாதம்,கே.விஜயரட்ணம்,ஜி.விசுவாசம் ஆகியோருடன் உதவிப் பிரதேச செயலர் எஸ்.சிவஸ்ரீ, பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், பிரதம விருந்தினர் வி.விஸ்வலிங்கம், திருமதி விஸ்வலிங்கம் ஆகியோர் அருகில் நிற்பதை மூன்றாவது படத்திலும் காணலாம். (படங்கள்:பரு.நிருபர்)

# நோத்முதல் கோபல்லவா வரை (30)



### ஆங்கிலேயர் கண்டியைப் பிடித்தமை

எகிலப்பொல மீது இப்போது குற்றத்தின் மேல் குற்றம் சுமத்தப்பட்டது. அவற்றை விசாரிப்பதற்கு அவனை 1814ஆம் ஆண்டு மார்ச் மாதம் அரண்மனைக்கு வருமாறு மன்னன் கட்டளையிட்டான். இவ்வாறான நிலைமையில் செய்வதென்ன எனத் தயங்கிய எகிலப்பொல ஆங்கிலேயரே தனக்குத் தஞ்சம் என எண்ணினான். அவன் டொயிலியிடம் பல கடிதங்கள் எழுதி அனுப்பினான். தனக்கு அரண்மனையில் இருக்கும் பகைமையையும், தன்மீது அரசன் சுமத்திய குற்றங்களையும், அரசன் தனக்குச் செய்த அநீதிகளையும் எழுதி ஆங்கிலேயர் கண்டி மீது படை எடுத்தல் வேண்டும் என்றும் தான் கண்டியரை ஆங்கிலேயருக்குச் சாதகமாகத் தூண்டி விடுவதாகவும் எழுதினான். எகிலப்பொலவுக்கு இருந்த அவசரம் டொயிலிக்கு இருக்கவில்லை. அவன் எகிலப்பொலவுக்கு வர்த்தகத்தைப் பற்றியே எழுதி வந்தான்.

அரசனுடைய கட்டளைக்குப் பணிய மறுத்த எகிலப்பொல அரண்மனைக்கு ஏகவில்லை. அவனுக்கு அங்கே என்ன நடக்கும் என்று தெரியும். எனவே ஆங்கிலேயரிடம் இறுதியாகச் 'சரண் உமைப் புகுந்தேன் என்னைத் தாங்குதல் தருமம்' என முன்னர் விபீடணன் இராமனிடம் சரணாகதியடைந்தமை போலச் சரணடைய வழிவகுத்தான். தனது அந்தரங்க நண்பனான எக்னெலிகொட என்பானை டொயிலியிடம் இரகசியமாகத் தூதுவிடுத்தான். எக்னெலிகொட 1814 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4,5 ஆகிய தினங்களில் டொயிலியைக் கண்டு எகிலப்பொலவுக்காகப் பரிந்துபேசி மன்னனுடைய கொடுங்கோலியல்பையும் அவன் குடிகள்ள வருத்தும் வகையையும் கூறி ஆங்கிலேயர் கண்டிமீது படை எடுத்தவுடன் சப்ரகமுவ, ஏழுகோரளை, நாலு கோரளை, மூன்றுகோரளை, உடுநுவர, எட்டிநுவர ஆகிய இடங்களில் உள்ள பொதுமக்கள் அவர்களை முழுமன தோடு வரவேற்பார்கள் என்றும் நன்றே செய்யின் இன்றே செய்மின் என்றும் கூறி நின்றான். எக்னெலிகொட என்னதான் கூறிய போதிலும் நாடறிந்த டொயிலி உணர்ச்சி வசப்படவில்லை. அவன் கண்டியில் தாம் பிரவேசிக்கத் தருணம் ஆகவில்லை என்றே கூறினான்.

### மீள் பார்வை

எகிலப்பொல ஆங்கிலேயருடன் தொடர்பு கொண்ட வரலாற்றை அரசன் அறிந்துகொண்டான். அரசன் தன்னை அவதானித்துக் கொண்டான் என்பதை எகிலப்பொலவும் அறிந்து கொண்டான். எகிலப்பொல அரசனுடைய கட்டளையை மீறியதும் இராச துரோகங்கள் செய்தமையுங் காரணமாக மன்னன் அவனை முதலதிகாரி என்ற உத்தியோகத்திலிருந்து நீக்கிவிட்டு அவனுடைய எதிரியாய மொலிகொடையை முதலதிகாரியாக நியமித்து அவனுக்கே மூன்று கோரளை, நாலு கோரளை, சப்ரகமுவ ஆகிய இடங்களையும் கொடுத்தான். இதை அறிந்த எகிலப்பொல சப்ரகமுவ பகுதிகளில் கலகத்தை உண்டாக்கிவிட்டு ஏனைய திசாவைகளையும் கலகஞ் செய்யுமாறு தூண்டினான்.

கலகங்கள் உண்டானதை அறிந்ததும் கண்டி மன்னன் உடனடியாக அவற்றை அடக்க முயற்சி செய்தான். தென்மேற்குப் பகுதிப் போக்குவரத்தை மூடிவிட்டு, கலகம் நடைபெற்ற இடங்களை விட்டுக் கரைநாட்டு வியாபாரிகளை வெளியேறும் வண்ணம் கட்டளையிட்டான். எகிலப்பொல தன் கட்டளைக்குப் பணிந்து தன்னிடம் வரும்வரை பிணையாளராக அவனுடைய மனைவி மக்களைச் சிறை செய்து காவலில் வைத்தான். கலகக்காரரை அடக்கி வருமாறு முதலதிகாரியாய மொலிகொடையை அனுப்பினான். மொலிகொடை மீது பொது மக்களுக்கு நல்ல அபிப்பிராயம் இருந்தது. எகிலப்பொலவுக்கு ஆங்கிலேயர் உதவியே சமய சஞ்சீவியாக வேண்டிய நிலைமை ஏற்பட்டது. எனவே எகிலப்பொல மிகவும் உருக்கமாகவும், விநயமாகவும் டொயிலிக்கு எழுதினான். 'ஐயா நீங்கள் எங்கள் நாட்டில் கருத்து வைத்திருந்தால் எதனையும் உடனடியாகச் செய்வதே நல்லது.

இது நல்ல தருணம். இத்தருணம் தப்பினால் இனி ஒருவேளை இதுபோலக் கைகூடமாட்டாது'.


இவ்வாறு எழுதிய எகிலப்பொல இறுதியில் ஆங்கிலேயரிடம் தானே சென்றான். ஆள்பதி பிறவுண்றிக் அவனைத் தகுந்த மரியாதையோடு வரவேற்றார். அவன் ஆள்பதியைக் கண்டவுடன் தாரை தாரையாகக் கண்ணீர்விட்டு "எனக்கு இந்த உலகத் தில் இனி உற்றார் உறவினர் இல்லை.

**க.சி.குலரத்தினம்**

ஆள்பதி அவர்களே என் தந்தை. சீமாட்டி பிறவுண்றிக் அவர்களே என் அன்னை. நீங்களே என் னைப் பெற்றவர்கள்" எனக் கூறிச் சிறுபிள்ளை போல அழுதான். அவன் அழவேண்டிய சந்தர்ப்பமும் கண்டியில் நிகழ்ந்தேவிட்டது. அவனுக்காகப் பிணையாளராகக் கண்டி மன்னன் அகப்படுத்தி வைத்திருந்த அவனுடைய மனைவி மக்களை மன்னன் எள்ளளவும் இரக்கமின்றி வாளால் எறிந்து கொலை செய்வித்தான். (தொடரும்)

# சர்வதேச தரத்துடன் போட்டிபோடும் வகையில் யாழ்.குடாநாட்டின் கல்வித்தரம் உயரவேண்டும்

## யாழ்.அரச அதிபர் உரை



(பருத்தித்துறை)

சர்வதேச தரத்துடன் போட்டிபோடும் வகையில் யாழ்.குடாநாட்டின் கல்வித்தரம் உயர வடமராட்சி கல்வி வலயமும் ஹாட்லிக் கல்லூரியும் தன் பங்களிப்பை முழுமையாக வழங்க வேண்டும் என்பதே இன்றைய இவ்விழாவில் எனது வேண்டுகோள் இவ்வாறு ஹாட்லிக் கல்லூரி பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்பொழுது யாழ்.அரச அதிபர் க.கணேஷ் தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்,

நாட்டில் ஏற்பட்ட கலவர நிலவரங்களினால் இக்கல்லூரி பாதிக்கப்பட்ட போதிலும் உங்களது முன்னேற்றத்தையும் கல்லூரிகளின் சாதனைகளையும் இவ் விழாவில் கலந்து காண்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன்.

இக் கல்லூரி 170 வருடங்களுக்கு மேலாக தனது விடாமுயற்சி, சிறந்த தலைமைத்துவப் பண்பு, மதிப்பார்ந்த தன்மை ஆகியவற்றை நிலைபேறாக பாதுகாத்து வருகின்றமையைக் கண்டு மிகவும் பெருமையடைகின்றேன்.

ஹாட்லிக் கல்லூரி ஆசிரியத்துவத்தையும், மாணவர்களது கற்றல் செயற்பாடுகளையும் அனைவருக்கும் பறைசாற்றுகின்றது. மேலும் இக்கல்லூரி அதன் இலக்குகளை அடைவதற்கு பலவிதமான இடர்பாடுகள், சவால்களை எதிர்நோக்க நேரிட்ட போதிலும் வெற்றிமேல் வெற்றி பெறுவதற்கு தொடர்ந்தும் ஆண்டவனின் கிருபை கிட்டவேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.

"கல்விக் கரையில கற்பவர் நாட்சில" என்பர் ஆன்றோர். கற்பதற்குரிய பருவம் மாணவப் பருவம். தமது பாடசாலை நாட்களின் பசுமை நிறைந்த நினைவுகளை மீட்டிப் பார்க்காத பெரியவர்கள் இல்லை எனலாம்.

### பாடசாலைக் கல்வி மகத்துவம் மிக்கது

பாடசாலைக் கல்வியின் மகத்துவம் அத்தகையது. வறுமையாலும் வேறு பல காரணங்களாலும் பாடசாலைக் கல்வியை இழந்து விடக் கூடாதென கருதியே கட்டாயக் கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. ஒவ்வொரு மாணவரும் தத்தமது திறனை அடையாளம் காணவும் வளர்த்தெடுக்கவும் களம் அமைத்துக் கொடுப்பன பாடசாலைகளே.

பெற்றோர் ஈன்றெடுத்த புதல்வர்களை சான்றோராக்கும் தலையாய கடமை பாடசாலைச் சமூகத்தைச் சார்ந்ததாகின்றது. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் அன்னை போல் மாணாக்கரின் சான்றாண்மையில் தலை நிமிர்ந்து நிற்பது பாடசாலை வரலாறு.

இக் கல்லூரி மாணவரான முன்னாள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் துரைராசாவின் சான்றாண்மை பொறியியல், நிர்வாகத்துறை என மட்டுப் படுத்தப்பட்டதல்ல.

காலன் அவ்ரைக் கவராதிருந்தால் யாழ். மாவட்ட அபிவிருத்தியில் அவரது பங்கும் பணியும் கணிசமாக இருந்திருக்கும் என்பது மறுப்பதற்கில்லை.

### காலத்தைப் படைக்கும் வலிமை

பேராசிரியர் எலியேசர், முன்னாள் சபா நாயகர் கே.பி. ரட்நாயக்கா உள்ளிட்ட மேதைகளின் சான்றாண்மைக்கு வித்திட்ட பெருமை இக்கல்லூரிக்கே உரியதாகும். இன்று இங்கு சீருடையில் கூடி நிற்கும் மாணவ சமூகத்தில் இருந்து இன்னும் பல மேதைகள் பல் துறையிலும் மிளிரவேண்டும் என்பதே அனைவரதும் எதிர்பார்ப்பு எனலாம்.

காலவோட்டத்தில் கரைகாணாது தத்தளிக்காமல் காலத்தைப் படைக்கும் வலிமை உங்கள் ஒவ்வொருவருக்கும் உரியதாக வேண்டும்.

கல்வி என்பது ஒரு தலைமுறை. தான் கற்றுணர்ந்ததன் அடித் தளத்திலிருந்து அடுத்த தளத்திற்கு அடுத்த சந்ததியினரை எடுத்துச் செல்வது என்பர். அதாவது ஒருவரின் தோள் மேல் ஏறிநின்று அடுத்தவர் பார்ப்பதுபோல எனச் சொல்வதுமுண்டு.

உண்மையில் கல்வி வளர்ச்சியுற வேண்டியது. வளர்ந்துகொண்டே இருக்க வேண்டியது. அது செவ்வனே நிகழ்வதாலேயே இன்றைய குழந்தைகள் மிகப் புத்தி சாதுரிய மானவர்களாக இருக்கின்றார்கள். இவர்களது புத்திக்கூர்மை முளையிலேயே கிள்ளி எறியப்படாமல் பேணிப் பாதுகாத்து வளர்த்தெடுக்கப்பட வேண்டியது.

"கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்கிறார் வள்ளுவர். கல்வி கிளிப்பிள்ளை போல் மனனம் செய்து அது கூடிய புள்ளிகளைப் பெறுவதற்குரிய ஒன்றல்ல. கற்க வேண்டும். ஐம்புலனும் கருத்தூன்றிக் கவனித்து கற்கவேண்டும். கற்றதை ஆழ்ந்து சிந்தித்து சந்தேகங்களுக்கு விடைகாண வேண்டும்.

இதன்போது கற்கும் கல்வி வாழ வழி காட்டி நிற்கும். அறிவை ,ஆற்றலை , மனப்பாங்கை மேம்படுத்தும் கல்வியால் ஒவ்வொருவருள்ளும் ஆளுமை விருத்தியுறும். சாதிக்கத் தூண்டும். கல்வியின் வலிமையால் சவால்களை எதிர்கொள்ள முடியும்.

'ஏட்டுச்சுரைக்காய் கறிக்குதவாது' என்பர். ஏட்டில் படிப்பதை யதார்த்தமான நடைமுறைகளுடன் இணக்கப்பாட்டினை ஏற்படுத்தும் பொழுதே கல்விப் பயன் நிறைவுடையதாகின்றது.

இன்று மேடையில் பரிசில் பெறும் மாணவர்களையும் அவர்களது ஆசிரியர்கள் பெற்றோர்களை பாராட்டிவாழ்த்துவதோடு "முயற்சி திருவினையாக்கும்", "முயலுங்கள் முன்னேறுங்கள்" என ஏனைய் மாணவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

இரு கரம் இணைத்து கரவொலி எழுப்பும் உங்களால் இயலாதது எதுவுமேயில்லை.

### கல்வி வகுப்பறையுடன் மட்டுப்படுத் தப்பட்டதல்ல

கல்வி என்பது வகுப்பறைச் செயற்பாட்டுடன் மட்டுப்படுவதல்ல. கலை இலக்கிய நடவடிக்கைகளும் விளையாட்டுத்துறையும் கூட கல்வியின் பாற்பட்டது. முன்னைய காலத்தில் ஐந்து வயதிலிருந்து 14 வயது வரை குருகுலத்தில் குருவின் வழிகாட்டலில் வாழும் மாணவர்கள் குருவுக்கு பணிவிடை செய்து அவர் பாதார விந்தங்களைப் பற்றிக் கற்றுக் கொண்டனர்.

குருவிடமிருந்து வெளிப்படும் ஒவ்வொரு வார்த்தையும் அங்கு நிகழும் ஒவ்வொரு செயலும் அர்த்தமுடையதாக இருக்கலாம் என உன்னிப்பாக அவதானித்தார்கள்.

### காலம் பொன்போன்றது

இன்று இலவசக் கல்வி , இலவச சீருடை, அன்பும் அரவணைப்பும் உள்ள பாடசாலைச் சூழல் மாணவர்களே! காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளுங்கள். கடந்த காலம் மீண்டும் வராது. தயவு செய்து காலத்தை பொன்னென மதித்து கல்வியைத் தொடருங்கள்.

இன்றைய சூழலில் உங்களுக்கு இன்னல்கள் இருக்கலாம். துன்பங்களைக் கண்டு துவண்டு போகாமல் இருள்சூழ்ந்த வாழ்வை ஒளிமயமானதாக்க நீங்கள் கற்க வேண்டியது எத்துணை அவசியமென்று உணரப்பட வேண்டும்.

அதிபர், ஆசிரியர்கள் மற்றும் கல்வி சாரா ஊழியர்கள் எல்லாவற்றுக்கும் மேலாக இங்கு கூடியிருக்கும் கல்விச்சமூகம் தன் கடமையை உணர்ந்து செயற்படுவதை உளமாரப் பாராட்டுவதோடு கணித பாடத்தில் தேசிய மட்டத்தில் மூன்றாம் இடம்பெற்ற மாணவனையும் அகில இலங்கை அமெச்சூர் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்ற மாணவனையும் பாராட்டிவாழ்த்துகின்றேன்.

1838 தொடக்கம் 2008 வரை 170 வருடங்களாக அர்ப்பணிப்புடன் சேவையாற்றும் அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள் எமது நெஞ்சிலே நிறைந்திருக்கிறார்கள். இவர்கள் அனைவருமே ஒவ்வொன்றாகத் தெரிந்தெடுக்கப்பட்ட பாரம்பரியத்தினால், கட்டியெழுப்பப் பட்டது எமது ஹாட்லிக் கல்லூரி.

### எனது வேண்டுகோள்

சர்வதேச தரத்துடன் போட்டியிடும் வகையில் யாழ்ப்பாணக்குடாநாட்டின் கல்வித்தரம் உயர வடமராட்சிக் கல்வி வலயமும் ஹாட்லிக் கல்லூரியும் தன் பங்களிப்பை முழுமையாக வழங்கவேண்டும் என்பதே இன்றைய விழாவில் எனது வேண்டுகோள்.

"நெஞ்சத்து நல்லம் யாம் என்னும் நடுவு நிலைமையால் கல்வி அழகே அழகு" என்பதை உணர்ந்து, தெரிந்து அழகும் ஆற்றலும் ஆளுமையும் உள்ளவர்களாக வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோமாக. (அ-52)

# வடகொரியாவால் ஜப்பானிய குடிமக்கள் கடத்தப்பட்ட விடயத்தை கைவிடமாட்டோம்


# அமெரிக்க அதிபர் உறுதி

ஜப்பானிய பயணத்தில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் 1970கள் 80களில் வடகொரியாவால் கடத்திச் செல்லப்பட்ட ஜப்பானியக் குடிமக்கள் விஷயம் கைவிடப்படமாட்டாது என்று உறுதியளித்துள்ளார்.

வடகொரியக் கம்யூனிஸ் அரசின் உளவாளிகளுக்குப் பயிற்சி கொடுப்பதற்காகக் கடத்திச் செல்லப்பட்டவர்களின் கதி இன்னமும் சரியாகத் தெரியவில்லை.

இவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிவிடுவதில் வடகொரியா முழு ஒத் துழைப்பையும் வழங்காமல் போகலாமென்ற சந்தேகங்கள் இருப்பது தமக்குத் தெரியும் என ஜப்பானின் ஹொக்கைய்டோ தீவில் பேசிய அதிபர் புஷ் தெரிவித்தார்.

கடந்த மாதம் வடகொரியா தன்னுடைய அணுத்திட்ட நடவடிக்கைகளை வெளியிட்டதைத் தொடர்ந்து அதன் மீதான தடைகளைத் தளர்த்த அமெரிக்கா முடிவெடுத்துள்ள நிலையில் இந்தக் காணாமல் போன ஜப்பானியக் குடிகளுக்கு என்ன நடந்தது என்று விப ரத்தை அறிய நடந்து வரும் முயற்சிகள் பாதிக் கப்படலாமென ஜப்பான் கருதுகிறது. (அ)




# எலிசபெத் மகாராணியின் தாயாரின் கடிதக்குறிப்பு 16ஆயிரம் பவுண்ட்ஸ் ஏலம்

பிரித்தானிய அரச குடும்ப அங்கத்தவர்களால் அரண்மனையின் நம்பிக்கைக்குரிய பணியாளர் ஒருவருக்கு எழுதிய கடிதங்கள் உள்ளடங்கலான பொருட்கள் 250 ஆயிரம் ஸ்ரேலிங் பவுனுக்கு அதிகமான விலைக்கு ஏலத்தில் விற்பனையாகியுள்ளன.

அவற்றுள் மேற்படி வில்லியம் தலோன் என்ற அரண்மனைப்பணியாளருக்கு பிரித்தானிய எலிசபெத் மகாராணியாரின் தாயாரால் எழுதி அனுப்பப்பட்ட குறிப்பு ஒன்றும் உள்ளடங்குகிறது.

அக் குறிப்பானது 16ஆயிரம் ஸ்ரேலிங் பவுனுக்கு (32 ஆயிரம் அமெரிக்க டொலருக்கு) ஏலத்திற்கு விற்பனையானது.

அதே சமயம் 1982ஆம் ஆண்டு மறைந்த இளவரசி டயானாவால் தனது முதல் குழந்தையான இளவரசர் வில்லியத்தின் பிறப்புப் பற்றி கலோனுக்கு எழுதப்பட்ட கடிதம் ஒன்று 5ஆயிரம் ஸ்ரேலிங் பவுனுக்கு விலை போயுள்ளது.

அத்துடன் 1981ஆம்ஆண்டு யூலை 29ஆம் திகதி நடைபெற்ற தனது திருமணத்தை ஒட்டிய தனது அறையில் தலோன் வைத்த மலர்கொத்துக்காக டயானா நன்றி தெரிவித்து அவருக்கு எழுதிய கடிதம் 4200 ஸ்ரேலிங் பவுனுக்கு விற்பனையானது. (அ)

# பலூன்களின் உதவியுடன் 378 கிலோ மீற்றர் பறந்து சாதனை

(ஒரேகன்)

ஹீலியம் வாயு நிரப்பப்பட்ட சாதாரண அலங்கார பலூன்களின் உதவியுடன் நாற்காலி ஒன்றில் அமர்ந்தபடி 378 கிலோ மீற்றர் தூரம் பறந்து அமெரிக்கர் ஒருவர் சாதனை படைத்துள்ளார்.

சனிக்கிழமை காலை ஒரேகனிலுள்ள பென்ட் என்னும் இடத்தில் இருந்து 150 பலூன்கள் இணைக்கப்பட்ட கதிரையில் மணிக்கு 20 மயில் வேகத்தில் பறந்த கென்ட் கோச் என்ற இன்னவர் (48வயது)அன்றைய தினம் மாலை இடாஹோவிலுள்ள கேம் பிரிட்ஜ் நகரில் பாதுகாப்பாக தரை இறங்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

நாற்காலியில் அமர்ந்தபடி 15 ஆயிரம் அடி உயரத்தில் பறந்த கென்ட் கோச் ,உயரத்தை கட்டுப் படுத்த செல்லும் வழியில் ஒவ்வொரு பலூனாக உடைத்தபடி பயணிக்க நேர்ந்ததாகக் கூறினார். இல்லையெனில் நாற்காலி 30 ஆயிரம் அடி உயரத்திற்கு மேல் எடுத்துச்செல்லப்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டார்.

அவருடைய இந்த நாற்காலியில் பறக்கும் முயற்சிக்கு 6ஆயிரம் அமெரிக்க டொலர் வரையான பணம் செலவிடப்பட்டதாகக் கூறப்படுகிறது. கென்ட் கோச் ஏற்கனவே இரு தடவை நாற்காலியில் பறக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் தோல்வியைத்தழுவியமை குறிப்பிடத்தக்கது.

தனது இந்த சாதனை் குறித்து அவர் விபரிக்கையில் தனது சிறு பராய ஆசை நிறைவேறியுள்ளதாக கூறினார்.

## உலக தரிசனம்

அதே சமயம் கென்ட் கோச்சின் மனைவி தனது கணவர் தொடர்பில் குறிப்பிடுகையில் நான் அவரை திருமணம் செய்தது முதற்கொண்டு ஒரு கணத்தையேனும் சோர்வாக உணரவில்லை எனத்தெரிவித்தார். (அ)

# ஜெர்மன் அருங்காட்சியகத்தில் ஹிட்லரின் மெழுகு உருவச் சிலையின்தலை துண்டிப்பு

(பெர்லின்)

ஜெர்மனிய பெர்லின் நகரில் புதிதாக திறந்து வைக்கப்பட்ட மேடம் துஸ்ஸாயுத் அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த சர்வாதிகாரி ஹிட்லரின் மெழுகு உருவச்சிலையின் தலையை துண்டித்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.





மேற்படி ஹிட்லரின் உருவச்சிலை யானது சனிக் கிழமை பொதுமக்கள் பார் வைக் காக முதன் முதலாக திறந்து வைக்கப்பட்டு ஒரு சில மணித்தியாலங்களில் அச்சிலையின் தலை துண்டிக்கப்பட்டுள்ளது.


அருங்காட்சியகத்தில் சர்வாதிகாரி ஹிட்லரின் மெழுகு உருவச்சிலை காட்சிப் படுத்தப்பட்டமையானது பெரும் சர்ச்சையை எழுப்பியிருந்த நிலையில் 41வயதான நபரொருவர் அவ் உருவச் சிலையின் தலையை துண்டித்துள்ளார்.

அந்த அருங்காட்சியகத்தின் இரண்டாவது பார்வையாளராக பதிவு செய்யப்பட்ட அந்நபர் நேரடியாக ஹிட்லரின் உருவச் சிலையை அணுகி கண்ணிமைக்கும் நேரத்தில் தாக்குதலை நடத்தியதாக கூறப்படுகிறது. (அ)


யாழ். கோண்டாவில் வடக்கு
அருள்மிகு மனோன்மணி அம்பிகா சமேத
ஸ்ரீ சிவபூதவராய சுவாமி தேவஸ்தானம்
இரதோற்சவ சிறப்பு மலர் - 08.07.2008







சிவனடியார்களே!

அன்பே தெய்வம், அருளே வடிவம், அன்பும் அருளும் சேர்ந்தது தான் தெய்வவடிவம். இத்தெய்வ வடிவமானது திருமூலரால் சிறப்பித்துக்கூறப்பட்டுள்ளது. இலங்கையின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாண மாநகரின் கோண்டாவில் வடக்கில் உள்ள அருள்மிகு மனோன்மணி அம்பிகா சமேத ஸ்ரீ சிவபூதவராயர் எழுந்தருளி அகிலமெங்கும் ஆன்மாக்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் எம்பெருமானின் அருட்சக்தியை சொல்லிலோ, எழுத்திலோ கூறிவிட முடியாது.

திருவாக்கும் செய்கருமமும் கைகூட வேண்டுவார்க்கு வேண்டும் வரம் அனைத்தையும் வாரி வழங்கும் கோண்டாவில் பதியுறை அருள்மிகு மனோன்மணி அம்பிகா சமேத ஸ்ரீ சிவபூதவராய சுவாமி இன்று தேரில் எழுந்தருளவுள்ளார். இன்று தேர் உலா வரும் எம்பெருமான் வேண்டுவார்க்கு வேண்டும் வரம் அனைத்தையும் வாரி வழங்க வேண்டுமென்று எம்பெருமானை வேண்டுகின்றோம்.

**தேர்த்திருவிழா இன்று காலை 10.00 மணிக்கு இடம்பெறும்.**

(1439)

சிவன் வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில்.

இங்ஙனம்
தேவஸ்தான பரிபாலன சபையாரும் ஊர் மக்களும்

தேர்த்திருவிழா சிறப்புற அனுசரணை வழங்குவோர் :

கவாஸ் தொலைத் தொடர்பு நிலையம்
டிப்போ சந்தி,
கோண்டாவில்.

ராஜா ஸ்ரோர்ஸ்
டிப்போ சந்தி, கோண்டாவில்

ம.கிருஸ்ணகுமார்
கிருஸ்ணா ஆட்டோ சேவிஸ்
டிப்போ சந்தி, கோண்டாவில்.

# உங்களுடைய சேமிப்புக்கு அதியுயர் பலன்களைப் பெறுங்கள்

**12%** க்கு அதிகமான வருடாந்த வட்டி வருவாய் *

கொமர்ஷல் வங்கி வழங்கும் "சுப்பர் சேவர்" சேமிப்புக் கணக்கு உங்களுக்கு மிகவுயர்ந்த நன்மைகளைத் தரும்.

> உடனடி CAT கார்ட் / உடனடி டெபிற் கார்ட் இலவசம்
> இன்டர்நெட் வங்கிச் சேவையின் ஊடாக 24 மணிநேரமும் கொடுக்கல் வாங்கல் செய்ய முடியும்
> பண மீளப்பெறுகை எண்ணிக்கைகளுக்கு வரையறை கிடையாது
> வைப்பு மீதியில் 80% வரை விரைவான கடன் (விசேட வட்டி வீதத்தில்)
> நாடுபூராகவும் பரந்த வலையமைப்பை உடைய எமது கிளைகள், சுப்பர் மார்க்கட் வங்கிச் சேவை கருமபீடங்கள், விடுமுறை தின வங்கிச் சேவை நிலையங்களில் வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்
> **உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப வைப்புப் புத்தகத்தையோ அல்லது வங்கிக் கணக்கு கூற்றினையோ பேண முடியும்**

ஆகக்குறைந்த ஆரம்ப வைப்புத் தொகை ரூ.50,000/-

இலங்கையின் தலைசிறந்த வங்கிக்கே உரித்தான உயர்ந்த நம்பிக்கை, உறுதிப்பாடு மற்றும் தனித்துவமான சேவைகளுடன்...

* வருடாந்த விளைவு வீதம் 12.68%

FitchRatings AA+ (lka) ஆக தரப்படுத்தப்பட்டுள்ளது

COMMERCIAL BANK
Super saver

கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்

Web www.combank.lk

# வேலை நிறுத்தம் யுத்தத்திற்கு எதிரானதல்ல அரசாங்கம் மக்களை ஏமாற்ற முற்படுகிறது

## ஜே.வி.பி.எம்.பி கே.டி.லால்காந்த தெரிவிப்பு

(கொழும்பு)

ஒரு நாள் அடையாள வேலை நிறுத்த போராட்டம் என்ற தொழிற்சங்க நட வடிக்



கையானது அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் செயற்பாடுகளில் ஒன்றே தவிர அது யுத்தத்திற்கு எதிரானது அல்ல. ஒரு நாள் வேலை நிறுத்தம் யுத்த நடவடிக்கைகளில் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தப்போவதில்லை என்று தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் தலைவரும் ஜே.வி.பியின் அனுராதபுரம் மாவட்ட எம்.பி.யுமான கே.டி.லால்காந்த தெரிவித்தார்.

போராட்டத்தை பகிஷ்கரித்து வேலைக்குச் சொல்வோருக்கு எந்தவித தீங்கும் இழைக்கப்படப்போவதில்லை. இன்னிலையில் அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கவிருப்பதாக கூறுகின்ற அரசாங்கம் போலி நாடகத்தை அரங்கேற்றி மேலும் மேலும் மக்களை ஏமாற்றும் நடவடிக்கைகளையே மேற்கொள்கின்றது என்றும் அவர் கூறினார்.

சகல ஊழியர்களுக்கும் 5ஆயிரம் ரூபாவால் சம்பளம் அதிகரிக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியே ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப்போராட்டத்தை எதிர்வரும் 10ஆம் திகதி வியாழக்கிழமை மேற்கொள்ளவுள்ளதாக தேசிய தொழிற்சங்க மத்திய நிலையம் அறிவித்திருந்தது.

இதில் சுமார் 500இற்கும் அதிகமான தொழிற் சங்கங்கள் கலந்துகொள்வதற்கான தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டிருக்கும் நிலையில் இப்போராட்டத்திற்கு அரசாங்கம் கடுமையான எதிர்ப்பை தெரிவித்திருக்கின்றது.

அத்துடன் யுத்தத்திற்கு பாதிப்பு ஏற்படுத்துவதாகவும் இந்த வேலை நிறுத்தப்போராட்டம் அமைந்திருப்பதாக கூறியிருக்கின்றது.

அரசாங்கத்தின் மேற்படி கருத்துகள் குறித்து கேட்டதற்கு பதிலளிக்கையிலேயே லால்காந்த எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், எமது ஒன்றிணைந்த வேலை நிறுத் தப் போராட்டத்திற்கான முன்னெடுப் புக்களைக் கண்டு அரசாங்கம் நன்றாகவே அச்சமடைந்திருக்கின்றமை தெரிகின்றது. அதனால் தான் முட்டாள் தனமான கருத்துக்களை உளறிக் கொண்டிருக்கின்றது.

வேலைநிறுத்தப்போராட்டம் என்பது உழைக்கும் வர்க்கத்தினரின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான ஒரு யுத்தியே தவிர அதன் வேறு எந்த நோக்கமும் இல்லை.

எமது போராட்டத்தின் அழுத்தம் அரசாங்கத்திற்குத்தான். இது யுத்த எதிர்ப்புப்போராட்டம் இல்லை. உழைக்கும் வர்க்கத்தினரின் போராட்டத்தையும் யுத்தத்தையும் அரசாங்கம் முடிச்சுப் போட நினைக்கின்றது. ஒரு மாதத்தில் 4 ஞாயிறு தினங்களும் ஒரு போயா தினமும் ஆக 5 விடுமுறைதினங்கள் வருகின்றன. இந்த விடுமுறை தினங்களால் யுத்தத்திற்கு பாதிப்பு ஏற்படாத போது எமது ஒரு நாள் வேலை நிறுத்தம் யுத்தத்தையோ அதன் வெற்றியையோ எந்த விதத்திலும் பாதிப்படையச் செய்யப்போவதில்லை.

தீர்க்கமான முடிவுகளை எடுக்கத்தவறுகின்ற மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கம் எமது போராட்டத்தை திசை திருப்ப முனைகின்றது . மேலும் வேலை நிறுத்த தினமான 10ஆம் திகதி போராட்டத்தை பகிஷ்கரித்து வேலைக்குச் செல்வோருக்கு அரசாங்கம் பாதுகாப்பு வழங்குவதாகவும் கூறியிருக்கின்றது.

இது பித்தர்களின் கருத்துக்குச் சமனானதாகும். ஏனெனில் வேலைக்குச் செல்வோருக்கு எவ்வித பிரச்சினைகளும் ஏற்படப்போவதில்லை. போராட்டத்தை பகிஷ்கரிப்பதும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதும் அவரவர் உரிமையாகும்.

இப்படி இருக்கும் போது பிழையான கற்பனைகளை வரைந்துகொண்டு ஊழியர்களுக்கு பாதுகாப்பு வழங்குவோம் என கூறுவதான அரசாங்கத்தின் போலி நாடகத்தையும் அது மீண்டும் மீண்டும் நாட்டு மக்களை ஏமாற்றுகின்ற தன்மையையும் எடுத்துக்காட்டுகின்றது.

இதேவேளை, வேலை நிறுத்தப்போராட்டம் தொடர்பில் 4 கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் கையளித்துள்ளோம் .அதில் அமைச்சரவைக்குறைப்பு, ஜனாதிபதி ஆலோசகர்களின் எண்ணிக்கை குறைப்பு 40 கோடி ரூபா செலவிலான வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல்களை காலவரையறையின்றி ஒத்தி வைத்தல் ,17 ஆவது திருத்தச் சட்டத்தை உடனடியாக அமுலுக்கு கொண்டுவருதல் போன்ற 4 அம்சக் கோரிக்கைகளையும் நிறைவேற்றுவதற்கான உறுதிப்பாடுகளை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னதாக அறிவிக்கப்படவேண்டும்.

அரசாங்கத்திடம் இவ்வாறான அறிவிப்பு கிடைக்குமாக இருந்தால் வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்பில் மீள்பரிசிலிக்கப்படும் அல்லது கைவிடப்படும். நாட்டு மக்களுக்கும் தெளிவுபடுத்த கடமைப்பட்டுள்ளோம்.

அந்த வகையில் எமது சம்பள உயர்வுக் கோரிக்கையை அடுத்த வரவு செலவுத்திட்டம் வரையில் ஒத்திவைக்கவும் தயாராக இருக்கின்றோம்.

ஆனால் அரசாங்கம் இதற்கு உடன்படாவிட்டால் திட்டமிட்டபடி வேலை நிறுத்தப் போராட்டம் நடந்தே தீரும் என்றார். (அ)

# காஷ்மீர் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் அமைதியான வழியில் தீர்வு காணவேண்டும்

## வெளிவிவகார அமைச்சர் போகொல்லாகம பாகிஸ்தானில் தெரிவிப்பு

(கொழும்பு)

இந்தியாவும் பாகிஸ்தானும் காஷ்மீர் பிரச்சினைக்கு அமைதியான வழியில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண வேண்டும்.

காஷ்மீர் விடயம் தொடர்பில் இதுவே இலங்கையின் நிலைப்பாடாகும் என வெளிவிவகார அமைச்சர் ரோஹித போகொல்லாகம தெரிவித்தார்.


இம் மாத இறுதியில் கொழும்பில் ஆரம்பமாகவுள்ள 15ஆவது சார்க் உச்சி மாநாட்டிற்கான அழைப்பிதழ்களை பாகிஸ்தான் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு வழங்குவதற்காக அங்கு சென்றுள்ள வெளிவிவகார அமைச்சர் போகொல்லாகம இஸ்லாமாபாத்தில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், கொழும்பில் நடைபெறவுள்ள 15ஆவது சார்க் உச்சி மாநாட்டில் உணவுபாதுகாப்பு ,சக்திப் பிரச்சினை தொடர்பாக இப்பிரச்சினையில் பிராந்திய நாடுகள் ஒன்றிணைந்து செயற்படுவது தொடர்பிலும் முக்கிய கவனம் செலுத்தப்படும்.

மேலும் வறுமை ஒழிப்பு, சுற்றாடல், விவசாயம், உணவு , நீர், பாதுகாப்பு விடயங்கள் பிராந்திய ஒத்துழைப்பு குறித்தும் மாநாட்டில் கலந்துரையாடப்படும்.

காஷ்மீர் பிரச்சினை தொடர்பில் இலங்கை தெளிவான நிலைப்பாட்டில் உள்ளது. இந்த சர்ச்சைக்கு இந்தியாவும் பாகிஸ்தானும் பேச்சுவார்த்தை மூலமான அமைதியான வழிமுறையில் தீர்வு காண வேண்டும் கொழும் பில் நடைபெறவுள்ள 15ஆவது சார்க் உச்சி மாநாடானது மக்களின் முன்னேற்றத்திற்கான கூட்டமைப்பு எனும் தொனிப்பொருளில் நடைபெறவுள்ளது என்றார்.

(அ)



யூனியன் அஷ்யூரான்ஸ் வாடிக்கையாளருக்கான இழப்பீடு கொடுப்பனவை பிரபல தொழிலதிபர் பேரம்பலம் நாகரத்தினம் வழங்குவதையும் அருகில் பிராந்திய முகாமையாளர் சி.என்.மதிவதனன் மற்றும் ஊழியர் களையும் படத்தில் காணலாம்.

# மக்களை பகடைக்காய்களாக பயன்படுத்தி கோரிக்கைகளை நிறைவேற்ற முயலாதீர்

## அரச ஊழியர்களிடம் ஜனாதிபதி வேண்டுகோள்

(கொழும்பு)

பொதுமக்களை பகடைக்காய்களாக பயன்படுத்தி கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளமுனையாதீர்கள். ஏனெனில் அரச ஊழியர்களின் சம்பளம் மக்களின் பணத்தின் மூலமே வழங்கப்படுகிறது .

நாட்டின் தற்போதைய சூழ்நிலையை புரிந்துகொண்டு அரசாங்க ஊழியர்கள் கடமையை நாட்டுக்காக அர்ப்பணிப்புச் செய்ய வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

அரச சேவைகள் ஐக்கிய தாதியர் சங்கம் பிரதிநிதிகளுடன் அண்மையில் அலரிமாளிகையில் நடத்திய பேச்சுவார்த்தைகளின் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இங்கு அவர் மேலும் கூறியதாவது,

எந்தவொரு அரசாங்கமும் ஆட்சிக்கு வந்து இரண்டரை வருட கால எல்லைக்குள் எமது அரசாங்கத்தைப்போன்று அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவில்லை.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் மூலம் ஆட்சிக்கு வந்தவுடன் அரச சேவையில் சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கும் அதிகரிப்பதற்கும் என பரிந்துரைகளை வழங்குவதற்காக சுயாதீன ஆணைக்குழு நியமிக்கப்பட்டது.

தேசிய சம்பள ஆணைக்குழு சுயாதீனமானது எனவே இதன் மீது அழுத்தங்களை பிரயோகிக்க எமக்கு அதிகாரம் இல்லை. தொழிற்சங்கங்கள் தமது சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்கான யோசனைகளை முன்வைக்கும் போது ஏனைய தொழில்துறை தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டும்.

ஒரு பிரிவினரின் பிரச்சினைக்கு தீர்வு கண்டு இன்னொரு பிரிவினருக்கு புதிய தொரு பிரச்சினையினை உருவாக்க அரசாங்கத்தால் முடியாது.

ஒரு சில அரசாங்கங்கள் ஓய்வூதியக் கொடுப்பனவை நிறுத்துவதற்கும் சட்டமூலங்களை கொண்டுவந்தன. அவற்றை ரத்துச் செய்து அரச சேவையில் கௌரவத்தை எமது அரசாங்கம் பாதுகாத்தது. நாட்டின் தேசிய பாதுகாப்பு அபிவிருத்தி தொடர்பில் அதிக கவனம் செலுத்தும் கடப் பாடு அரசாங்கம் என்ற ரீதியில் ஒப்படைக் கப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய சூழ்நிலையை கருத்தில் கொண்டு தமது கடமையை நாட்டுக்காக அர்ப்பணிப்புடன் மேற்கொள்ளவேண்டிய கால கட்டம் இதுவாகும்.

எனவே தத்தமது குறுகிய அபிலாஷைகளை முதன்மைப்படுத்தி செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டாம் என்றார்.

இதன் போது சுகாதாரத்துறையில் தோன்றியுள்ள பிரச்சினைகள் மற்றும் சம்பள முரண்பாடுகளை நீக்குவது தொடர்பில் பரிந்துரைகளை முன்வைப்பதற்காக விசேட குழு ஒன்றையும் ஜனாதிபதி நியமித்துள்ளார். (அ)

# நடிகைராதிகா ஒரு சிங்களப் பெண்! நடிகர் சங்கத்தில் வாய்த்தர்க்கம்

தமிழ்திரைப்பட தயாரிப்பாளர் சங்கத் தேர்தலில் போட்டியிடும் நடிகை ராதிகாவுக்கும் மற்றொரு தயாரிப்பாளருக்கும் இடையே ஏற்பட்ட வாக்குவாதம் முற்றி கைகலப்பு ஏற்



படும் சூழ்நிலை உருவானதால் பெரும் பதற்றம் ஏற்பட்டது. தக்க நேரத்தில் பொலிஸார் தலையிட்டு தடுத்ததை அடுத்து பெரும் மோதல் தவிர்க்கப்பட்டது. தமிழ் திரைப்பட தயாரிப்பாளர்கள் சங்கத்தின் நிர்வாகிகளை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் பிலிம் சேம்பரில் நடைபெற்றது.

செயலாளர் பதவிக்கு போட்டியிடும் கேயார் நடிகை ராதிகா ஆகியோர் வாக்களித்தனர். நடிகை ராதிகா வாக்களித்து விட்டு வெளியே வந்தபோது ராம நாராயணன் அணியை சேர்ந்த கே.பி பிலிம்ஸ் பாலு வாக் களிக்க உள்ளே வந்தார்.

கடந்த ஒருவார காலமாக தேர்தல் பிரசார மேடைகளில் பாலு, நடிகை ராதிகா தமிழ் பெண் அல்ல என்றும் ,அவர் ஒரு சிங்கள பெண் என்றும் கூறி வந்ததாக சொல்லப் படுகிறது. இதை மனதில் வைத்திருந்த ராதிகா பாலுவை நேருக்கு நேராக சந்தித்தபோது நீங்கள் எப்படி அப்படி பேசலாம் என்று கேட்டார். உடனே பாலுவுக்கு ஆதரவாக தயாரிப்பாளர் செல்வராஜ் உள்ளிட்டோர் சூழ்ந்தனர்.

இதையடுத்து ராதிகாவுக்கு ஆதரவாக அவரது கணவர் சரத்குமார் சகோதரர் ராதாரவி பஞ்சு அருணாசலம் உள்ளிட்டோர் சூழ்ந்து கொண்டனர். எனது தந்தை எம். ராதா பச்சை தமிழன் அப்படியிருக்க நீங்கள் என்னை எப்படி அவ்வாறு கூறலாம் என்று ராதிகா ஆவேசமாக குரலெழுப்பினார்.

இதையடுத்து பாலுவுக்கு ஆதரவாகவும் ராதிகாவுக்கு ஆதரவாகவும் பலரும் பேசினார்கள் இதனால் ஏற்பட்ட வாய்த்தகராறு முற்றியது இரு தரப்பினரும் சரமாரியாக ஒரு வரையொருவர் ஆவேசமாக திட்டிக்கொண்டனர்.

இந்த நிலைமையில் இரு தரப்பினருக் கும் இடையே கைகலப்பு உருவாகும் சூழல் ஏற்பட்டது இதையடுத்து பிலிம் சேம்பர் வளாகத்தில் பெரும் பதற்றம் நிலவியது .

இதனை அவதானித்து பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த இணை கமிஷனர் லட்சுமி, உதவி கமிஷனர்கள் கிருஷ்ணமூர்த்தி, முரளி ஆகியோர் இரு பிரிவினருக்கும் இடையே புகுந்து அவர் களை பிரித்தவுடன் சமாதானமாக போகும்படி அறிவுரை கூறினார். (அ)

சோம்பல் உன்னை ஏமாற்றாமல் காத்துக் கொள். ஏனெனில் அதற்கு இன்று ஒரு நாளைக் கொடுத்தால் அது அடுத்த நாளையும் திருடிக் கொள்ளும். – குரோகுவில்

வலம்புரி

## விவசாயிகளுக்கு உதவ பொது அமைப்புக்கள் முன்வர வேண்டும்

'மீனைக் கொடுக்காதே. மீனைப் பிடிக்கக் கற்றுக் கொடு' என்பது சீனப் பழமொழி. இப்பழமொழியின் உள்ளார்ந்த அர்த்தம் அற்புதமானது.

பொருளாதாரத்தில் பின்தங்கியோருக்கு உதவுகின்றபோது அந்த உதவியானது உடனடியான தேவையை மட்டும் நிறைவு செய்வதாக மட்டும் இருக்கக் கூடாது.

மாறாக, அவர்களின் எதிர்கால வாழ்க்கையை நகர்த்துவதற்கான – சொந்தக் காலில் தங்கியிருப்பதற்கான உதவியாகவும் இருக்க வேண்டும் என்ற கருத்து யதார்த்தமானது. இதனையே சீனப் பழமொழி எமக்கு உணர்த்துகின்றது.

அதாவது ஒருவனின் பசிக்காக மீனைக் கொடுத்து விட்டுச் சென்றால் மறுநாள் அவனின் நிலை யாது? அவனுக்கு யார் அந்த மீனைக் கொடுப்பார்கள்? அடுத்த நாள் யாரேனும் ஒருவர் கொடுத்தாலும் அவரின் வாழ்நாள் பூராகவும் மீனைக் கொடுப்பதென்பது சாத்தியமற்றதல்லவா?

எனவே நாம் அவருக்கு உதவி செய்வதாக இருந்தால் மீனைப் பிடிப்பதற்குக் கற்றுக் கொடுத்தால் அது அவரின் வாழ்நாள் பூராகவும் உதவுவதாக அமைவதோடு அவரின் குடும்பமும் சிறப்பான வாழ்க்கையை வாழ முடியும்.

இந்தச் சீனப் பழமொழி எமக்குச் சாலப் பொருத்துடையதாகும். யுத்த சூழ்நிலை – இடப்பெயர்வு – தொழில் இழப்பு என்பவற்றின் மத்தியில் நிவாரணங்களும், உதவிக் கொடுப்பனவுகளும் கட்டாயமானவை.

ஆனால் அந்த நிவாரணங்களையே நம்பி சுயதொழில் முயற்சியை – உற்பத்தி நடவடிக்கையைக் கைவிடும் நிலை இருக்குமாயின் அது மிகப் பெரும் பாதகமாக அமையும்.

இந்நிலை யாழ். குடாநாட்டில் உள்ளமை வேதனைக்குரிய செய்தியாகும். எனவே இத் துரதிர்ஷ்ட நிலையைத் தவிர்க்க – தடுக்க யாழ்ப்பாணத்தில் இயங்கும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் விவசாய உற்பத்திகளுக்குத் தாராளமான உதவியை வழங்க வேண்டும்.

குறிப்பாக நெல் உற்பத்தி மற்றும் சிறு தானிய உற்பத்திகளுக்கான உதவிகளை அரச சார்பற்ற அமைப்புக்கள் வழங்குவதன் மூலம் யாழ். குடாநாட்டில் நெல் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதுடன் உணவுப் பொருள்களின் உற்பத்தியைப் பெருக்க முடியும்.

அரச சார்பற்ற அமைப்புக்களினால் வழங்கப்படும் உதவிகள் விவசாய உற்பத்தி நோக்கியதாக அமையும்போது விவசாயப் பொருள்களின் உற்பத்தி அதிகரித்து உணவுப் பொருள்களின் தட்டுப்பாடு நீங்கவும் அவற்றின் விலை குறையவும் வாய்ப்பாக அமைவதுடன் நிவாரணத்தை நம்பி தங்கி வாழும் துர்ப்பாக்கிய சூழமைவும் இல்லாமல் போகும் என்பதால் இது விடயத்தில் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் அதீத கவனம் எடுத்தாக வேண்டும்.

# மேலதிக அமைச்சுக்களை விட்டுக்கொடுக்க அமைச்சர்கள் சிலர் மறுப்பு!

(கொழும்பு)

அமைச்சர்களாக உள்ளவர்கள் இரண்டு அமைச்சுப் பொறுப்புக் களைக் கொண்டிருந்தால் அதில் ஒன்றிலிருந்து



விலக வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கடந்த வாரம் அனைத்து அமைச்சர்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

எனினும் இதனைப்பல அமைச்சர்கள் ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளனர்.

அரசாங்கத்தின் அமைச்சரவையின் அளவைக்குறைக்குமாறு எதிர்க்கட்சிகள் குரல் கொடுத்துவருகின்றனர்.

இந்நிலையில் இரண்டு அமைச்சுப்பொறுப்புக்களைக் கொண்டுள்ள அமைச்சர்களை ஒன்றை மாத்திரம் வைத்துக்கொண்டு ஏனையவற்றை விட்டுக்கொடுக்குமாறு ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க கடந்த வாரம் அமைச்சர்களுக்கு கடிதங்கள் அனுப்பி வைத்துள்ளனர்.

எனினும் இந்த உத்தரவு ஜனாதிபதியின் ஒன்றுவிட்டசகோதரனான சாமல் ராஜபக்ஷ மற்றும் ஜி.எல்.பீரீஸ் ஆகியோருக்கு விடுக்கப்படவில்லை எனத்தெரிவிக்கப்படுகிறது.

இதனையடுத்து தெங்கு அபிவிருத்தி மற்றும் தேசத்தை கட்டியெழுப்பும் அமைச்சர் சாலிந்த திஸாநாயக்க தமது தெங்கு அபிவிருத்தித்துறை அமைச்சை விட்டு விலகியுள்ளார்.

எனினும் அமைச்சர்களான மஹிந்த விஜேசேகர டிலான் பெரேரா போன்றோர் தம்மால் ஒரு அமைச்சை மாத்திரம் வைத்துக்கொண்டு ஏனையவற்றை கைவிட கோரும் உத்தரவுக்கு எதிராக குரல் கொடுத்துள்ளனர்.

இந்த உத்தரவு ஏன் அமைச்சர் சாமல் ராஜபக்ஷவுக்கு ஜி.எல். பீரிஸுக்கும் விடுக்கப்படவில்லை என அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதேவேளை அரசாங்க உயர் மட்டத்தின் ஒரு அரசியல் நகர்வு எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# அதிபர், ஆசிரியர் சம்பள முரண்பாடு 3 கட்டங்களாக நிவர்த்தி செய்யப்படும்

## கல்வி அமைச்சு சுற்று நிருபம்

(கொழும்பு)

ஆசிரியர் மற்றும் அதிபர் சேவையில் நிலவும் சம்பள முரண்பாடுகளை மூன்று கட்டங்களாக நிவர்த்தி செய்யும் வகையில் உடனடி சுற்றுநிருபம் ஒன்று விடுக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

அண்மையில் ஆசிரியர் மற்றும் அதிபர் சங்கங்களால் ஜனாதிபதி செயலாளரிடம் கையளிக்கப்பட்ட யோசனைகளும் இந்த நடவடிக்கைகளின் போது பரிசீலிக்கப்படும் என அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கல்வியமைச்சு வேதன மற்றும் ஊழியர் ஆணைக்குழு மற்றும் திறைசேரி ஆகியவற்றின் அதிகாரிகளுக்கிடையில் விசேட கலந்துரையாடல் ஒன்று இன்று இடம்பெறவுள்ளது.

இதன்போது வேதனமுரண் பாட்டை நிவர்த்தி செய்யும் யோசனைகள் தொடர்பாக பரிசீலிக்கப்பட்டு இறுதி முடிவு எடுக்கப்படும் என கல்வியமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (அ-6)

# சார்க் மாநாட்டு ஏற்பாடுகள் மந்த கதியில் இடம்பெறுகின்றன

(கொழும்பு)

எதிர்வரும் சார்க் மாநாட்டுக்கு இன்னும் சில நாட்களே உள்ளன.

எனினும் இந்த மாநாட்டிற்கான ஏற்பாட்டு நிகழ்வுகள் மந்த கதியிலேயே இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன.

கொழும்பு மாநகரசபை இந்த ஏற்பாடுகளை நடத்துகின்ற போதிலும் அதற்கு பாதியளவில் நிதி தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது கொழும்பு மாநகரசபை வீதிப்புனரமைப்புப்பணிகளை கடன் அடிப்படையிலேயே மேற்கொண்டு வருகிறது.

இந்த நிலையில் எதிர்வரும் வெள்ளிக் கிழமை அன்றே சார்க்மாநாட்டிற்கான நிதித்தேவைக்கான முன்கூட்டிய நிதி ஒதுக்கல் சட்டம் மூலம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

சார்க் மாநாட்டிற்காக 2.8 பில்லியன் ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் இதற்கு ஆதரவாக வாக்களிக்க ஐக்கிய தேசியக்கட்சியும் ஜே.வி.பியும் இன்னும் முடிவெடுக்கவில்லை. நாடு கஷ்ட நிலையில் இருக்கும் போது இவ்வாறான ஒரு மாநாடு தேவை இல்லை என ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்துள்ளது.

இது விடயத்தில் நாளைய தினமே முடிவெடுக்கப்படும் என ஜே.வி.பி அறிவித்துள்ளது.

எனினும் எதிர்க்கட்சிகளின் ஆதரவின்றியே சார்க் மாநாட்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தை சபையில் நிறைவேற்ற முடியும் என அரசாங்கம் நம்பிக்கை கொண்டிருப்பதாக அரசாங்கத்தரப்பு தெரிவித்துள்ளது. (அ-5)

## ஐ.தே.க.வின் தேசியப்பட்டியல் வெற்றிடத்திற்கு ஹக்கீமை நியமிக்கத் தீர்மானம்

ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற தேசியப்பட்டியல் வெற்றிடத்திற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூக் ஹக்கீம் பெயரைப் பிரயோகிக்க அந்தக்கட்சி தீர்மானித்துள்ளது.



நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சியின் உயர் பீடக்கூட்டத்திலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டிருப்பதாக முஸ்லிம் காங்கிரஸின் பிரதிப்பொதுச் செயலாளரான நிசாந்காரியப்பர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சி அந்த வெற்றிடத்தை தற்காலிகமாக எஸ்.பி.திஸாநாயவுக்கு வழங்குவதற்காக தங்களிடம் அனுமதி கேட்டு கோரிக்கை விடுத்ததாகவும் அதை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாடாளுமன்றத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியப்பட்டியலில் நிலவும் வெற்றிடத்திற்கு கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவு செய்யப்பட இருப்பதாகவும் கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (அ-6)

ஓலைச் சுவடிகள் 57

தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

## இரு கன்னங்களிலும் மஞ்சள் பூசுவது பெண்களுக்கு ஐஸ்வரியமா?

இரு கன்னங்களிலும் மஞ்சள் பூசி யாராவது செல்வது கண்டால் அவர்களை ஆண்கள், ஏன் பெண்களே பரிகாசம் செய்வதுண்டு.

பொதுவாக இவ்வாறுசெய்வதனால் அழகு கூடும் என்பதே நம்பிக்கை. அழகைக் கூட்டுவதில் பெண்கள் முக்கியத்துவம் அளிக்க ஆரம்பித்ததிலிருந்து மஞ்சள் பூசுவதிலும் அதிகம் விருப்பம் தெரிவிக்கின்றனர். அழகை மிகையாக்குவதற்காகவே மஞ்சள் பூசுகின்றனர் என்றாலும் அதனால் கிடைக்கும் பலன் வேறுதான்.

நாம் முகத்தை எவ்வளவு சுத்தமாக வைத்திருந்தாலும் அழுக்கும் கிருமிகளும் படிய வாய்ப்புக்கள் ஏராளம். இது சரும நோய்களுக்கு வழிவகுக்கும் என்பதில் சந்தேகமில்லை. முகத்தில் வந்து சேரும் நோயணுக்களை அழிக்கும் சக்தி மஞ்சளுக்குண்டு என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆகவே நோயணுக்களை அழிக்கவே பெண்கள் மஞ்சள் பூசுவது. இதைக் கூறும் போதுவேறு ஒரு விஷயம் கவனிக்க வேண்டும். உணவில் மஞ்சள் சேர்ப்பதுநிறத்துக்காக என்று பலரும் நினைப்பதுண்டு. ஆனால் அப்படியல்ல உணவுப் பொருட்களிலிருந்து நோய ணுக்களை அழித்து சுத்தப்படுத்துவதற்காகவே மஞ்சள் சேர்க்கப்படுகிறது.

நிறத்துக்காகவோ அழகுக்காகவோ அல்ல.

மாநகர ச[illegible], யாழ்ப்பாணம்.



## மிக்-27...

தாக்குதலையடுத்தே இலேசான சேதத்துடன் விமானம் கட்டுநாயக்கவை நோக்கித் திரும்பிச் செல்ல கட்டாயப்படுத்தப்பட்டதாகத் தமிழ்நெற் செய்தி வெளியிட்டுள்ளது. இந்த விமானம் கிளிநொச்சியில் தாக்கு தலை நடத்திய போது முதியவர் ஒருவர் காயமடைந்ததாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## வன்னியிலி...

பாரியளவு ஆயுதங்களை நாங்கள் மீட்டுள்ளோம். அண்மையில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்ட களியாட்ட நிகழ்வும் வர்த்தகக் கண்காட்சியும் பாரிய வெற்றியைத் தந்துள்ளது.

யாழ்.குடாநாட்டிலுள்ள மக்கள் கொழும்பில் இருப்பதை விட யாழ்ப்பாணத்தில் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பதாகவும் இராணுவத் தளபதி கூறினார். வர்த்தக மற்றும் விவசாய செயற்பாடுகள் சுமுகமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்ட மேஜர் ஜெனரல் மார்க், சரியான நேரத்தில் யாழ்ப்பாணத்தில் தேர்தல் நடத்தப்படும் எனவும் கூறினார். (எ-5)

# சமாதானப் பேச்சுக்களின் போது தமிழ்க் கட்சிகளும் பங்கேற்கும்

## அரச சமாதான செயலகப் பணிப்பாளர் தகவல்

(கொழும்பு)

சமாதானப் பேச்சுக்களில் இனிமேல் விடுதலைப்புலிகளுடன் ஏனைய தமிழ்க் கட்சிகளும் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்று அரசாங்கத்தின் சமாதானச் செயலகப் பணிப்பாளர் ரஜீவ விஜயசிங்க அறிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று திங்கட்கிழமை காலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அரசாங்கம் இப்போதும் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு தயாராகவேயுள்ளது. எனினும் புலிகள்தான் அதற்கான சமிஞ்ஞையை முதலில் தெரியப்படுத்த வேண்டும். புலிகள் தாங்கள் பேச்சுவார்த்தைக்குத் தயார் என ஊடகங்கள் வாயிலாக அறிவித்து வருவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்றார். (ச-5)

## ஓமந்தைச் சோதனைச் சாவடி...

திருந்தனர்.

இந் நிலையில் அரசாங்கம் நேற்றுப் பாதுகாப்பு உத்தரவாதத்தை வழங்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனையடுத்து நேற்று மாலை 3மணி முதல் 5 மணி வரையான இரண்டு மணித்தியாலங்களுக்கு ஓமந்தைச் சோதனைச் சாவடி திறக்கப்பட்டிருந்தது.

பொதுமக்களே நேற்றுப் பயணம் மேற்கொண்டனர். பொருள்களை ஏற்றிய வாகனங்கள் இன்று முதல் இப் பகுதியூடாகப் போக்குவரத்தில் ஈடுபடலாம் என இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். (ச-5)

## சர்வகட்சிக் குழுவில் சிவகீதா பிரபாகரன்

(கொழும்பு)

தமிழ்மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் சார்பில் மட்டக்களப்பு மாநகர சபையின் மேயர் சிவகீதா பிரபாகரன் சர்வகட்சிப் பேரவையை பிரதிநிதித்துவப்படுத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழ்மக்கள் விடுதலைப்புலிகளின் சார்பில் சிவகீதா பிரபாகரனின் பெயரைக் கட்சி அனுப்பி வைத்துள்ளதாக சர்வகட்சிப் பேரவையின் தலைவர் அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

எனவே தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த சர்வகட்சிப் பேரவையின் நடவடிக்கைகள் மீண்டும் வெகுவிரைவில் ஆரம்பிக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். சர்வகட்சிக் குழுவில் தமிழ்மக்கள் விடுதலைப்புலிகளை இணைத்துக் கொள்வதற்கு அரசாங்கம் ஏற்கனவே அனுமதியளித்திருந்தபோதும் அதற்கான பிரதிநிதியை அக்கட்சி நியமிக்காதிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## ஜூலை 10 பணிப்புறக்கணிப்புக்கு...

போராட்டமாகும்.

அந்த வகையில் சகல தொழிற்சங்கங்களும் எந்தவித வேறுபாடுமின்றி இதில் கலந்து கொள்ள வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுவதுடன், தமிழ்மக்களின் முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் தெரிவித்துக் கொள்கின்றது.

அரசின் பிழையான கொள்கைகள் எமது நாட்டைத் தோல்வி கண்ட நாடாக்கியுள்ளதுடன், ஏழை மக்களைப் பிச்சாபாத்திரம் ஏந்தும் நிலைக்கும் தள்ளியுள்ளது.

எனவே இன, மத பேதமில்லாமல், கட்சி வேறுபாடில்லாமல் சகல தொழிற்சங்கங்களுமே இந்த வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டு இதனை வெற்றியடையச் செய்ய வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கோருகின்றது.

அரசாங்கத்தால் நடத்தப்படும் போரின் பின்னணியில் அரசு தனது பல தவறுகளை மூடி மறைப்பதற்கு முயற்சிக்கின்றது. இந்த நாட்டில் நீண்ட காலமாக வேரூன்றி வந்திருக்கும் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அரசால் இற்றை வரையில் ஒரு நியாயமான தீர்வுத் திட்டம் முன்வைக்கப்படவில்லை.

அரசால் ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கைகளையே அரசு முறியடித்து 1988 ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்டு அந்த நேரத்திலேயே தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட 13-வது அரசியல் சாசனத்தை ஒரு தீர்வாக அமுல்படுத்துவதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது.

இதன் மூலம் ஒரு நியாயமான அரசியல் தீர்வை முன்வைப்பதற்கு அரசின் விருப்பமின்மை தெளிவாக எடுத்துக் காட்டப்படுகின்றது. இக் காரணத்தின் நிமிர்த்தமே அரசு தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இராணுவ நடவடிக்கையைக் கையாள்கின்றது.

எமது நாட்டில் ஏற்படும் விலை உயர்வு, வளர்ச்சியடைந்த நாடுகளில் நிலவும் விலைக்குச் சமமாகவேயுள்ளது. அவ்வாறான நாடுகளின் தொழிலாளர்கள் பெறும் சம்பளம் மிக உயர்ந்ததாகவேயுள்ளது.

எமது நாட்டில் ஒரு தொழிலாளி பெறும் சம்பளம் அவனது உணவுக்கே போதுமானதாகவில்லை. மேலும் அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்கள், ஊடகவியலாளர்களைக் கட்டுப்படுத்துதல் மற்றும் ஜனநாயக விரோத செயல்கள் போன்றவை அரசினால் நடத்தப்படும் போரின் பெயராலேயே மேற்கொள்ளப்படுகின்றது.

இச் செயல்கள் மக்களின் சுதந்திரத்தைப் பறித்துப் பீதியும் பயமும் நிறைந்த ஒரு சூழலில் வாழ்வதற்கு மக்களை நிர்ப்பந்திக்கின்றது. அனைத்துலக சந்தையில் விலையேற்றத்தைச் சாட்டாகக் கூறும் அரசு நூற்றுக்கும் அதிகமான அமைச்சர்களையும் பிரதி அமைச்சர்களையும் அளவற்ற ஜனாதிபதி ஆலோசகர்களையும் நியமனம் செய்து இவர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளுக்காக மக்களின் பெருந்தொகைப் பணத்தை வீண் விரயம் செய்கின்றது என்பதை அரசு இன்னமும் உணரவில்லை.

எனவே தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்துகின்றோம் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

## ஜனாதிபதி...

அமைப்புக்கள் இணைந்து நேற்று இந்தப் போராட்டத்தை நடத்தின. போராட்டத்தில் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளும் பங்கேற்று ஜனாதிபதிக்குத் தந்திகளை அனுப்பி வைத்தனர்.

இவ்வாறு அனுப்பப்பட்டதந்திகளில் ஊடக சுதந்திரத்தைப் பாதுகாக்கும்படியும் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்துபவர்களை உடனடியாகக் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்தும்படியும் நாமல் பெரேராவைத் தாக்கியவர்களைக் காட்டிக் கொடுத்து விட்டு 50 இலட்சம் ரூபாயையும் மகிந்தவே எடுத்துக் கொள்ளுங்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## சிறுவர் பூங்கா இன்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

தென்னிந்தியத் திருச்சபையின் மானிப்பாய் அருள்மனை சிறுவர் இல்லத்தில் கால்போமன் சிறுவர் பூங்கா இன்று பிற்பகல் 3 மணிக்குத் திறந்து வைக்கப்படுகின்றது.

ஆசிரியர் ஏ.சி.பிரான்ஸிஸ் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக எஸ்.அனிக்குறேன் கலந்து கொண்டு சிறுவர் பூங்காவைத் திறந்து வைப்பார். (ச-5)

## தேர்த் திருவிழா

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய தேர் உற்சவம் இன்று பிற்பகல் 2.45 மணிக்கு இடம்பெறும்.

நாளை காலை 11 மணிக்குத் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ச-5)

## கொழும்பில் 48 மணி நேரத்தினுள்...

அரசாங்கத்திற்கு எதிராக எதிர்வரும் 10 ஆம் திகதி தென்பகுதியில் பாரிய வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஜே.வி.பி. அழைப்பு விடுத்திருந்தது.

இந்த அழைப்பை எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஏற்றுக் கொண்டுள்ளதுடன் அரசாங்கத்திலுள்ள 90 சத வீதமான தொழிற்சங்கங்களும் இந்த வேலை நிறுத்தப் போராட்டத்திற்குத் தமது ஆதரவைத் தெரிவித்துள்ளன.

இந்த நிலையிலேயே தென்பகுதியில் எதிர்வரும 48 மணி நேரத்தில் புலிகள் பாரிய தாக்குதல்களை நடத்தத் திட்டமிட்டுள்ளனர் என்று அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேயவர்த்தன அறிவித்துள்ளார்.

இது குறித்து நேற்று மதியம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

புலனாய்வுத்துறையினரின் தகவலின்படி எதிர்வரும் 48 மணி நேரத்தில் தென்பகுதியில் புலிகள் பாரிய தாக்குதல்களை ஒரே நேரத்தில் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

எனவே எதிர்வரும் 10 ஆம் திகதி மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள வேலை நிறுத்தப் போராட்டத்தை அதன் ஏற்பாட்டாளர்கள் கைவிட்டு விட வேண்டும்.

இல்லையேல் இத்தகைய போராட்டத்தில் இடம்பெறும் தாக்குதல்களுக்கு அரசாங்கம் பொறுப்பல்ல. குறிப்பாக தொழிற்சங்கப் பிரதிநிதிகளைக் குறிவைத்து இடம்பெறும் தாக்குதல்களுக்கு அரசாங்கம் பொறுப்புக் கூற முடியாது.

எனினும் இத்தகைய தாக்குதல் அச்சத்தினால் பாதுகாப்பை உச்ச அளவில் பேணுவதற்கு அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

எனவே தேசிய பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இத்தகைய வேலை நிறுத்தப் போராட்டம் கைவிடப்பட வேண்டும். அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

அரசியல்வாதிகள் மேற்கொள்ளும் இந்த வேலை நிறுத்தப் போராட்டமானது புலிகளுக்கே சாதகமானதாகவுள்ளது. இத்தகைய வேலை நிறுத்தப் போராட்டத்தால் அரசுக்கு எதிராகத் தொழிலாளர்களைத் தூண்டிவிடும் சதித்திட்டம் உள்ளது என்றார் அவர்.

இதேவேளை பொலிஸ் மா அதிபரும் புலிகளின் தாக்குதல் அபாயம் குறித்த எச்சரிக்கைய்யை கொழும்பு மற்றும் அநுராதபுரம் உள்ளிட்ட மூன்று இடங்களிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்குத் தெரியப்படுத்தி முழு உச்ச விழிப்பு நிலையில் இருக்குமாறு உத்தரவிட்டுள்ளார் என்றும் தெரியவருகின்றது. (ச-5)

## தமிழ்...

வருகையில் இந்திய அர்சின் இந்த நடவடிக்கைகள் முக்கியத்து வம் வாய்ந்தவை என்று கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் கடற்படை உயர் அதிகாரிகள் மேற்கொண்ட பயணத்தினைத் தொடர்ந்து உச்சிப்புள்ளிப் பகுதியில் கடற்படையினரின் வான் கண்காணிப்பு நிலையத்தை அமைப்பது தொடர்பான முடிபுகள் எடுக்கப்பட்டிருந்தன.

கொச்சிப் பகுதியில் நிறுத்தப்பட்டுள்ள இரண்டு இஸ்ரேலியத் தயாரிப்பான ஆளில்லாத உளவு விமானங்களை உச்சிப்புள்ளியில் நடவடிக்கையில் ஈடுபடுத்தத் தீர்மானித்திருப்பதாகக் கடற்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதியிலுள்ள 3 ஆயிரம் அடி நீளமான விமான ஓடுபாதையை 6 ஆயிரம் அடிகளாகத் தரம் உயர்த்துவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படவுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)


## உடன் தேவை

❖ பாதுகாப்பு உத்தியோகத்தர், ஆண்கள், (யாழ்.நகரமையத்திலிருந்து 4 கிலோ மீற்றர் தூரத்திற்குள் இருப்பவர்கள்)

❖ விநியோகஸ்தர் (தென்மராட்சி றூட்)

வியாபாரம் மற்றும் சொந்தத் தேவை கருதி தினசரி அதிகாலை வேளையில் சாவகச்சேரி, கொடிகாமம் ஆகிய இடங்களுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று வருபவர்கள் விரும்பத்தக்கது.

10.07.2008 அன்று பிற்பகல் 3 மணிக்கு நேரில் வரவும்.

நிர்வாக உத்தியோகத்தர்
வலம்புரி
இல.3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.





## மூவர் பாடிய அற்புதத் திருப்பதிகங்கள் (விளக்கக் குறிப்புகளுடன்) தொகுப்பு நூல்

## வெளியீட்டு விழா

100 ஆண்டு நிறைவு கண்ட நடராஜர் (ஈழத்துச் சிதம்பரம்)

**இடம்:**
காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் மாணிக்கவாசகர் மண்டபம்

**காலம்:**
சர்வதாரி வருஷம் ஆனி மாதம் 25 ஆம் நாள் உத்தர நட்சத்திர சுபவேளையில்
09.07.2008 அன்று புதன்கிழமை முற்பகல் 11 மணியளவில்

**தலைவர்:**
'அடியார்க்கு அமுதூட்டும் அண்ணல்'
திரு.க.கு.க.சிவபாலன் (கே.கே.கே.) அவர்கள்
(தலைவர் வெளியீட்டு விழாக்குழு)

**சிறப்பு விருந்தினர்:**
திரு.ஆர்.ரி.ஜெயசீலன் அவர்கள்
(உதவி அரசாங்க அதிபர், காரைநகர்)

**சிறப்புப் பிரதி பெறுபவர்:**
திரு.எஸ்.வெற்றிவேலாயுதம் அவர்கள்
(வலம்புரி நிறுவனம்)

*அன்பர்கள், ஆதரவாளர்கள், சைவ அபிமானிகள் யாவரையும் இருகரம் கூப்பி அன்புடன் அழைக்கின்றோம்.*

வெளியீட்டு விழாக்குழு,
தலைவர், செயலாளர்.

(C-1298)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.07.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.